Registered No. M. 878.

283

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதாநியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மக்ஞாநக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கிலமீ
15உயில் பிரசுரமாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 4. } 1913ஞு டிசம்பர்மீ 15உ பிரமாதீசஞு மார்கழிமீ 1உ { பகுதி 8.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., F. T. S.
} பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.

## (CONTENTS.)


1. தற்காலநிலைமை—அ. ரங்கஸ்வாமி ஐயர் 265
From the Editor—A. Rangaswami Iyer

2. உதய நக்ஷத்திர ஸங்கம்—ஜி. எஸ். அருண்டேல் 270
Order of the Star in the East—G. S. Arundale.

3. உயர் லக்ஷ்யங்களின் பிரயோஜநம் } B. S. R. சுப்பிரமணியன். 278
The Importance of High Ideals—B.S.R.Subramanian.

4. பிரஹ்மக்ஞான தர்சநம் (பாலபாடம்) } வி. வெங்குசாமி ஐயர். 282
Elements of Theosophy—V. Venguswamy Iyer.

5. அஹல்யா சாபவிமோசனம்—R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A. 286
Curse of Ahalya discharged—R. Srinivasa Iyer M. A.

6. துகாராம் பாவாவின் சரித்திரம்—ஏ. சிவராவ். 290
Life of Tukaram Baba—A. Siva Rao.

7. மநம்—மு. வேங்கடஸாமி நாட்டார். 295
Mind—M. Venkatasamy Nattar.

8. மதுரை வித்யா தர்மபரி பாலன சபை } R. ரங்கஸ்வாமி ஐயர். 297
Vidya dharma Paripalana Sabha of Madura.

9. காலஞ்சென்ற P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் } வி. ராமசந்திர ஐயர். 299
The late Mr.P.S.Subramania Iyer–V.Ramachandra Iyer.

10. புத்தக வரவு—பத்திராதிபர்
Review of Books—Editor. 301

11. பத்திரிகை வரவு—பத்திராதிபர்.
Review of papers—Editor. 301

12. சமாசாரம்—பத்திராதிபர்.
News—Editor. 302

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. } 1913ஞு டிசம்பர்மீ 15உ
பிரமாதீசஞு மார்கழிமீ 1உ { பகுதி 8.

## தற்கால நிலைமை.

உலகத்தில் பல தேசங்களில் பரவியுள்ள நமது பிரஹ்மக்ஞான சங்கம் இதுவரை வகித்து நடாத்திய கடமைகளைக் காட்டிலும், தற்காலநிலையில் அதற்கமைந்துள்ள கடமைகளோ வென்றால் வெகு விரிவாகவும், நாநாவித பிரிவுகளுடன் உலகத்தில் பொது நன்மையைத் தழுவி நடைபெறும் பிரவிர்த்திகளிலெல்லாம் நுழைந்து, ஊக்கம், விடாமுயற்சி இவைகளைக் காட்டத் தக்கனவாகவும் இருக்கின்றன. இதுவரை மதங்களின் அபிவிருத்தி சம்பந்தமாகவும், தத்துவவிசார விஷயமாகவும், வற்புறுத்திச் சொல்லுவதும், அப்படிச் சொல்லுதலை யநுசரித்து பழைய கிரந்தங்களை வெளிப்படுத்துவதும், அக் கருத்துடன் நூதன கிரந்தங்களைப் பிரகடனஞ் செய்வதும், அந் நோக்கங்களை யாதரித்து பிரசங்கங்களை நடத்துவதும், கர்லாந்தர ஸஞ்சிகைகளை ஏற்படுத்துவதும் பிரஹ்மக்ஞான ஸபையின் முக்கிய வேலைகளா யிருந்துவந்தன.

*
* *

இவைகளெல்லாம் முக்கிய வேலைகளே யாயினும், முடிவுபெற வேண்டிய வேலைகளின் சில அம்சங்களே யொழிய வேறல்ல. ஒரு கட்டிடத்திற்கு அஸ்திவாரம் எவ்வாறு முக்கியமா யுளதோ, அவ்

வாறு பிரஹ்மக்ஞான சபையின் மேலே குறித்த வேலைகள் ஆகின்றன. அஸ்திவாரம் மட்டும் ஏற்பட்டு பூர்ணமாகாத கட்டிடம் எவ்வாறு இவ்வுலகில் மனிதர்களின் உபயோகத்திற்கு அமையமாட்டாதோ, அவ்வாறு ஒழுக்கத்தில் அநுசரிக்காமல் ஞான கிரந்தங்களைக் கேவலம் கற்றலும், பொது நன்மையைக் கருதாமல் சுய நன்மையை நாடி முக்தியடைய விரும்புதலும் மனிதர்களின் இஹபர சுகங்களுக்குக் காரணமாக மாட்டா. அஸ்திவாரம் பலமாக ஏற்பட்டபின், எப்படி மேற்கட்டிடத்தை அலங்காரமாகவும் நீடித்திருக்கத் தக்கதாகவும் செய்யவேண்டுவ தவசியமோ, அப்படியே சரீரத்தைக் காட்டிலும் விலக்ஷணன் ஆத்மாவென்றும், இவ்வுலகத்தைக் காட்டிலும் வேறாக இதர உலகங்களும் இருக்கின்றன வென்றும், ஜன்மாந்தரங்கள் உள்ளனவென்றும் தெளிந்து, ஜீவர்கள் வழிபடும் முறைகளைக் கற்றிருக்கின்ற நமது பிரஹ்மக்ஞான சபை இனி, லௌகிக விஷயங்களாகக் கருதப்படுகிற இராஜாங்கமுறை (Politics), ஆசாரமுறை (Sociology), லௌகிக வித்யைகள், கலைகள், சாஸ்திரங்கள் (Literature, Sciences and Arts), நாகரிகவழிகள் (Civilization), வியாபாரம், கைத்தொழில்கள் (Trades and Industries), பாமரர்களையும் கொடியர்களையும் நல்வழிப்படுத்தல் (Elevation of the Depressed and Criminal Classes) முதலிய வழிகளிலும் பிரவிர்த்தித்தல் சபையின் அபிவிருத்திக்கும் நீண்டகாலம் மேன்மையோடு விளங்குவதற்கும் அத்தியாவசியகமா யுள்ளது.

* * *

இப் பிரஹ்மக்ஞான சபையானது உலகமெங்கும் பரவி சென்ற 38 வருஷங்களாக பல கிளைகளாகப் பலவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டு வருகிறது. இது பிரதிஷ்டைபெற்ற வருஷமான 1875-ம் ஆண்டிலும் அதற்கு முன்பின் சில வருஷங்களாகவும், பூதசாஸ்திரிகளால் (Scientists) வெகு உற்சாகத்துடன் ஆதரிக்கப்பட்டுத் தழைத்தோங்கிவந்த சார்வாகமென்ற நாஸ்திகமதத்தை இச்சபை வேரோடு களைந்து, அதினுடைய ஸ்தானத்தில் ஆஸ்திகமதத்தை ஸ்தாபித்து, இந்த உலகத்தின் லௌகிக வைதிக ஆளுகையானது ஈசுவர கிங்கரர்களாகிய தேவர்கள், ரிஷிகள் இவர்களுக்குள் ளிருக்கின்றதென்ற தத்துவத்தை உறுதிப்படுத்தி, ஆத்மக்ஷேமத்தை

முக்கியமாகக் கருதினல்மட்டும் லௌகிக சம்பத்தானது, தனித்த ஒருவனலாயினும் சரி, அல்லது ஜாதி, தேசம் என்ற ஜனசமூகத்தா லாயினும் சரி, நீடித்தடையத் தக்கதென்று வற்புறுத்தியிருக்கின்ற பிரகாரம், ஆத்ம க்ஷேமத்தையே முக்கியமாகக் கருதிவருகிற இச் சபை இனிமேல் லௌகிக விர்த்தியில் உற்சாகத்துடன் பிரவிர்த்தி க்கத் தருணம் ஏற்பட்டுவிட்டது.

* * *

ஒவ்வொரு ஜாதியாருக்கும் லௌகிக மஹோன்னத தசை வித் திக்கு முன்னர் அவ்வித தசையின் அடிப்படையாக ஆசாரியர்கள் தோன்றி, வைதிக சிரத்தையை ஊட்டுகின்றார்கள். நமது ஆரிய வம்சத்தார்களுக்கு வைவஸ்வதமனுவானவர் க்ஷத்திரிய தர்மமாகிய ஆளுகையைக் கைக்கொண்டு ஆரியர்களுக்குள் பலமுறையவதரித்து அவர்களின் நீடூழிகால அபிவிருத்தியின் பொருட்டு வர்ணாசிரம தர் மங்களை ஸ்தாபித்தும், ஜகத்குருவாகிய லோகாசார்யர் வியாஸபக வான் வேதங்களை வகுத்தும் புராணங்களை யேற்படுத்தியும் ஸூத் திரங்களாய் ஞானத்தைப் புகட்டியும் ஆர்யர்களின் ஆத்ம க்ஷேமத் தின் பொருட்டு கர்ம, ஞான, பக்தி மார்க்கங்களைக் காட்டியு மிருக் கின்றனர்.

* * *

ஜகத் குருவானவர் வியாஸராய் இப்பரத கண்டத்தி லவதரி த்தபின் எகிப்து தேசத்தில் ஹேர்மீஸ் (Thoth or Hermes) ஆக அவதரித்து அச்சாதியாருக்கு ஸூர்ய தேஜஸ் ரூபமாகிய ஈசுவர னையடையும் வழியைக் காண்பித்து, பிறகு பாரஸீக தேசத்தில் தோன்றி ஸரதுஷ்ட்ரா (Zarathushtra) என்ற நாமம் தரித்து, மனோவாக்கு காயங்களின் நிர்மலத்துவம் ஆவசியகமென வற்புறு த்தி அக்னி ரூபமாகிய ஈசுவரனை ஆராதிக்கும் வழியைக் காட்டிக் கடைசியாக நமது ஆரியாவர்த்தத்தில் கௌதமராக ராஜ வம்சத்தி லவதரித்து ஸிம்ஹாஸநத்தைத் துறந்து, தவவேடம் பூண்டு ஞான த்தைக் கைக்கொண்டு இவ்வண்டத்தின் கண்ணுள்ள தேவர், மனி தர் முதலாகிய ஸர்வ ஜீவராசிகளுக்கும் ஆசாரியஸ்தானத்தை யடைந்து மேல் நோக்கிச் சென்றனர்.

* * *

அவருக்குப் பின் வந்த மஹாபுருஷர் அவர் ஸ்தாநத்தை வகி த்து இப்பரத கண்டத்தில் எல்லோருடைய மநத்திலும் பக்தி பஜ

வசத்தால் ஆனந்தத்தை உண்டு பண்ணத்தக்க ஸ்ரீ கிருஷ்ண பகவானாக அவதரித்து, பிருந்தாவனத்தில் அதியற்புதமான லீலைகளைக் காட்டி, இக்காட்டில் பக்தி வெள்ளமானது எக்காலத்திலும் இடைவிடாது பெருகும்படி செய்து, மேற்றிசையோர்கள் கடைத்தேறும் வண்ணம் அப்பக்கத்தில் தோன்றி கருணைக்கடவுளாக அவதரித்து பரோபகாரம், தயை, பொது நன்மை முதலிய தர்மங்களை முக்கியமாகக் கொண்ட ஒரு மதத்தை ஸ்தாபித்தனர்.

* * *

அத்தயாநிதியானவர், தற்காலத்தில் அவதரிக்கும் தருணத்தைக் காட்டக் கூடிய குறிகள் ஏற்படுகின்றன. அருட்பிரகாச வள்ளலார் என்ற ராமலிங்கம் பிள்ளையவர்கள் தாம் இயற்றிய அருட்பாவில் அவர் நல்வரவை அடியிற் கண்ட பாசுரங்களில் குறிப்பிட்டிருக்கின்றனர்:—

ஆற்றுவெள்ளம் வருவதன்முன் னணைபோட வறியீர்
அகங்காரப் பேய்பிடித்திர் ஆடுதற்கே யறிவீர்
கூற்றுவருங் காலதனுக் கெதுபுரிவீ ரையோ
கூற்றுதைத்த சேவடியைப் போற்றவிரும் பீரே
வேற்றுரைத்து வினைபெருக்கி மலிகின்ற வுலகீர்
வீணுலகக் கொடுவாழ்க்கை விட்டுவிட்டு வம்மின்
சாற்றுவக்க வெனதுதனித் தந்தைவரு கின்ற
தருணமிது சத்தியஞ்சிற் சத்தியைச் சார்வதற்கே.
பொய்விளக்கப் புகுகின்றீர் போதுகழிக் கின்றீர்
புலைகொலைகள் புரிகின்றீர் கலகலவென் கின்றீர்
கைவிளக்குப் பிடித்தொருபாழ்ங் கிணற்றில்விழு கின்ற
களியரெனக் களிக்கின்றீர் கருத்திருந்துங் கருதீர்
ஐவிளக்கு மூப்புமர ணாதிகளை நினைத்தா
லடிவயிற்றை முறுக்காதோ கொடியமுயற் றுலகீர்
மெய்விளக்க வெனது தந்தை வருகின்ற தருண
மேவியதீண் டடைவீரே லாவிபெறு வீரே.

தற்காலத்தில் அவரவதரிக்குமுன் உலகத்தை யவர் கருத்துக் கிணங்கும்படி செய்து, உலகத்திலுள்ளோர் அவர் நல்வரவினால் பூர்ணப் பிரயோஜனம் பெற அவர் வரவை பஹிரங்கப்படுத்த வேண்டியதும், அவர் தோன்றியபின் அவர் எடுத்துக் காட்டும் வழிகளை யநுசரிக்கச் செய்யவேண்டியதும் தற்காலத்தில் இப்பிரஹ்மஞான ஸபையின் கடமைகளில் ஒன்றாக விருக்கின்றது.

ஆகையால் பல விஷயங்களில் பிரவிர்த்தித்திருக்கும் மனித முயற்சிகளை ஒன்றுபடுத்தி அவருக்குச் சம்மதமாயுள்ள ஒரு நோக்கத்திற் கிணங்கச் செய்யவும், அவர் வந்த பின்னர் அப்பிரவிர்த்திகள் அதே நோக்கத்துடன் மேற்செல்லுமாறு அவர் வழிகாட்டுவதற்கு ஏற்ற சாதனங்களைத் தற்காலத்தில் ஏற்படுத்தவும் பிரஹ்மஞான சங்கமும், நக்ஷத்திர சபையும் (Order of the Star in the East) ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

*
* *

மேற்சொல்லிய விஷயங்களுக்கு அநுகுணமாக "Theosophical Educational Trust" என்ற வித்தியாபிவிருத்தி ஸபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு நமது தேசத்தில் வாலிபர்களுக்கு லௌகிக வித்தைகளையும், சீலத்தையும், நற்குணத்தையும் போதிக்கத் தக்க வித்தியாசாலைகளை ஏற்படுத்தியும் அவ்வழியில் செல்ல சம்மதமாயுள்ள வித்யாசாலைகளைத் தன் வரம்புக்குள் சேர்த்துக் கொண்டும் வருகின்றது. அடுத்த ஜனவரிமீ ராஜாங்க முறை, ஆசார சீர்திருத்த முறை, கல்வி, சாஸ்திரப் பயிற்சி முதலிய ஜனங்களுக்குப் பிரயோஜனகரமான விஷயங்களை எடுத்துக் காட்டும் "பொது நன்மை" (Commonweal) என்ற ஒரு பத்திரிகையானது வாரந்தோறும் அடையாற்றிலிருந்து பிரசுரமாகும். அதற்கு மாதுஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையார் பத்திராதிபர்.

*
* *

லண்டன்மாநகரிலிருந்து "Herald of the Star" என்ற பரமகுருவின் வரவை உலக மெங்கும் கேட்கக் கூவும் மாதாந்தப் பத்திரிகையானது அவருக்கு ஸம்மதமாயுள்ள வழிகளில் எல்லாப் பொது முயற்சிகளையும் எடுத்துக் காட்டி 1914 ௵ ஜனவரிமீ முதல் வெளியாகப் போகிறது. ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியவர்கள் அதற்குப் பத்திராதிபர்.

*
* *

இப்படி விடா முயற்சியுடன் செய்யப்படும் பின் விவரிக்கப் பெறும் காரியங்களில் நமது பத்திரிகையும், நம் பத்திரிகையைப் படிப்பவர்களும் அவர்களுக்கேற்ற பாரத்தைக் கைக்கொண்டு மேல் நடாத்துவார்களாக.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

# உதய நக்ஷத்திர ஸங்கம். *

நண்பர்களே!

இப்பெயர் பூண்ட மஹா சங்கம் ஒன்று உலகத்தின் தற்கால நிலைமைகளை உத்தேசித்தும், மற்றும் பல காரணங்களைக் கொண்டும் ஸர்வஸமயங்களினுடையவும் ஆசாரியராகிய ஜகத் குருவின் அவதாரம் அதிசமீப காலத்தில் நிகழவேண்டும் என்ற நம்பிக்கையுடைய ஸகல மதஸ்தர்களாலும் கூடி ஏற்படுத்தப்பட்டு நடந்து வருகின்றது என்பதைப் பலர் அறிவார்கள். இச்சங்கத்தின் பத்திரிகை யொன்றும் நக்ஷத்திர தூதன் (Herald of the Star) எனும் பெயர் பூண்டு மூன்று மாதத்திற் கொரு தடவையாய் இப்பூமண்டல மெங்கும் உலாவி வருகின்ற தென்பதையும் நண்பர்களறிவார்கள். இச்சங்கமும் அதன் கார்யாதிகளும் நாளுக்கு நாள் மிக விரைவுடன் விருத்தி யடைந்து வருகின்றதையும், எண்ணிலா உண்மதங்கள் நிறைந்து பல்வேறு கொள்கைகளும் முரண்பாடும் உள்ளனவாகிய அநேகம் ஸமயங்களிலும், நடை, உடை, பாவனைகளாலும், சீதோஷ்ண ஸ்திதிகளாலும் வேறுபடுகின்ற அநேக தேசங்களிலும் 'ஜகத் குருவாகிய பரமாசாரியன் அவதரிக்கும் காலம் அடுத்தது' எனும் நம்பிக்கை பரவி மானிடர் உளங்களில் ஸ்திரமாயமைந்து விளங்குவதையும், கண்ணுறும் யாவரும் இம் மஹா ஸங்கத்திற்கு ஈசுவர கடாக்ஷம் நிரம்ப ஏற்பட்டிருக்கிற தென்று ஒப்புக்கொள்ளப் பின்வாங்கார்.

இவ்வித காரணங்களை யுத்தேசித்து இம்மஹா ஸங்கத்தின் தலைவர் மேற்கூறிய ஸங்கத்தின் பத்திரிகையை மிகவும் விருத்தி செய்து, அதை மாதந்தோறும் வெளிப்படுத்தும்படியான விஸ்தாரமாகிய ஏற்பாடுகள் செய்ய உத்தேசித்திருக்கிறார். இப்பத்திரிகையானது ஸர்வ ஸமயங்களுக்கும் பரமாசாரியனாகிய மஹா புருஷனது வரவை உலகத்தின் நாற்புறங்களிலும் விளம்பரம் செய்வதற்கு எழுந்த ஓர் கருவியே யாதலால், அப்பெருந் தொழிலை நிறைவேற்றுதற்குத் தகுந்த யோக்யதையும் அங்கமும் அது பெற்று உலாவுதல் வேண்டுமன்றோ! ஆதலின் அப்பத்திரிகை அதன் அளவும், பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டு 1914௵ ஜனவரி௴

* Translated by Mr. R. Sundararaja Iyer, Lodge Inspector, T.S.

முதல் இங்கிலாந்தில் பிரசுரமாகி வெளியேறும். பிரதிமீ மும் 11வ யன்று பிரசுரமாகும். தக்க கல்விமான்களிடமிருந்து நிருபங்களும் சமய சந்தர்ப்பங்களுக் குசிதமான படங்கள், சித்திரங்களும் இதன் கண் காணப்படும்.

இம்மஹா ஸங்கத்தின் தலைவராகிய ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியவர்களின் கருத்தாவது:–இவ்வுலகினது ஸகல வியவஹாரங்களையும் ஆழ்ந்து பரிசோதித்து விசாரணைசெய்து, வருங்காலத்தைப் பற்றிய அறிவால், அவற்றைச் சீர் தூக்கித் தெளிந்து கொள்ளலும், இனியவதரிக்கும் மஹா புருஷன் மேற்கூறிய வியவஹாரங்களை ஒழுங்கு படுத்தி மன்பதைகள் படும் துயரெலாம் நீங்கி உயர்வு பெற வாழும் பொருட்டு எவ்வித உபதேசங்களையும், பெரும் கருத்துக்களையும் வெளியிடுவாரோ, அப்பேர்ப்பட்ட விஷயங்களை சூசிப்பிக்கத்தக்க வழிகளைப் பற்றி ஆழ்ந்து விசாரித்தலும் இச்சங்கத்தின் கடமைபாகு மென்பதே. ஆதலின், தற்காலத்தில் இவ்வுலகின்கண் இகபர விஷயங்களைப் பற்றி எவ்வகைக் காரியாதிகள் நடந்தேறிவருகின்றன வென்பதைக் கவனித்து, அவை யாவற்றையும் உலகத்தைநடாத்திவரும் மகரிஷிகளின் நோக்கப்படி பக்குவப்படுத்திமேல்நடத்திக்கொள்வதற்கு வழிகள் யாவையென நமது ஆஸ்திகபுத்தியாலும், பக்தி கலந்த உண்மை யறிவாலும் உணர்ந்தறிதற்கு முபலுதலே, இப்பரம புருஷன் வரவிற்கு உலகத்தைத் தயார் செய்தலாகும்.

ஆதலின் இம்மஹா ஸங்கத்தின் பத்திரிகையும், வரப்போகும் அவதார காலத்திற் கேற்றபடி உலகம் சீர்திருந்துமாறு அவசியமான எவ்வகை வியவஹாரங்களையும் விஷயங்களையும் பற்றி விசாரிக்கப் புகுதல் தன் கடமையாகத் தலைமேற்கொள்ளும். அவ்விஷயங்களிற் சில அடியில் குறிப்பிக்கப்படுகின்றன.

1. உலகில் பல தேசங்களிலும் ஜாதியார்களுள்ளும் நகரவாஸிகளும் கிருஹஸ்தர்களும் ஒழுக வேண்டிய முறைகளும் இச்சாதியார்களும் தேசங்களும் பொதுவில் ஒருவரோ டொருவர் கலந்துறவாடும் வழிகளும்,

2. அவ்விதமே உலகில் விளங்கும் ஸகல ஸமயங்களும் ஒன்ரோடொன்று கலந்தொழுகும் நெறிகளும்,

3. ஒவ்வொரு சாதியிலுமுள்ள உள்வகுப்பினர் ஒருவரோடொருவர் கலத்தல், ஒவ்வொரு தேசத்திலுமுள்ள ஏழைகள், குற்றவாளிகளென உலகத்தாரால் இகழப்படுவோருக்கும், கூலி சீவனஞ்செய்து பிழைப்போர்க்கும் மற்றும் கல்வி முறையிலோ இராஜாங்க முறையிலோ வேலையி லமர்ந்து பிழைப்போர்க்கும் தக்க வேலைகளையும் கூலிகளையும் ஜீவனோபாயங்களையும் ஏற்படுத்தும் விதங்களும், மானிடர் யாவர்க்கும் ஒழிந்த வேளைகளில் மனத்திற்கு ஸமாதானத்தை விளைவிக்கும் காட்சி, சித்திரம் முதலிய விநோதங்களின் அமைப்புகள், ஜநஸமூஹங்களின் ஸுகாதார விதிகள் ஆகிய ஸகல விஷயங்களையும் பற்றி ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு தேசங்களிலும் எழும் திரவியாபேக்ஷை, ஜநங்களின் ஒற்றுமை யின்மை முதலிய பல்விதமாய தீராச் சங்கடங்கள், தடைகள் முதலியவற்றை நீக்கிக் கொள்ளுமாறு, இந்த ஜகத்குருவாகும் பரம புருஷன் வரவில் பூர்ணநம்பிக்கையுள்ளா ரனைவரும், எவ்விதமாய் மற்றவர்களைக் காட்டிலும் விசேஷமான பிரயத்நங்களைச் செய்து கொள்ளுதல் கூடுமென்பதும்,

4. பிரபஞ்சத்தில் மானிடர்க்கும் இதர கணங்களாகிய தேவர்கள், விலங்கினங்கள் முதலியவற்றிற்கும் உள்ள சம்பந்தங்கள், இச்சங்கத்தில் பெரும்பாலர்க்கு ஜகத் குருவாகும் பரமாசாரியர் மானிடரைப் போலவே கந்தமூலங்கள், மிருகங்கள், லோஹங்கள் இவை யாவையும் பரிபாகப்படுத்தி அதனதன் வழியே அவைபவற்றை நடத்தி அபிவிருத்திக்குக் கொண்டு வருபவர் என்பது நன்ருய்த் தெரிந்த விஷயமன்ரே? ஆதலின் இப்பத்திரிகையில் காலந்தோறும் இவ்விஷயங்களைப் பற்றி நூதனமாயும் ஆச்சரியகரமாயும் வரையப்பட்ட வியாஸங்களும் காணப்படும்.

அவதரிக்கப் போகும் பரமகுருநாதனது மொழிகளும் உபதேசங்களும் அன்பின் வழியே நிலைபெறுமாதலால் இப்பத்திரிகையும் உலகில் எவரிடத்திலும், எல்லா நிலைமைகளிலும் அன்பு வெறும் பேச்சில் மட்டும் இல்லாமல் நடத்தையிலும் பிரத்தியக்ஷமாய்ப் பிர

காசிக்தல் வேண்டுமென்று எடுத்துரைக்கும். தற்காலத்திய நாகரிகத்தில் எழும் துன்பங்கள் யாவும் அன்பின்மையாகும் ஒரே காரணம் பற்றி நிகழ்கின்றன எனவும், ஆங்காங்கு காணப்படும் பலவகைத் துன்பங்களாகும் வியாதிகளனைத்திற்கும் அன்பேயாகும் மருந்தைக் கொடுத்துத் தீர்ப்பது ஸாத்தியமென்று தெளிவித்து, இன்ன இன்ன வியாதிக்கு இவ்விவ்விதமாய் அம்மா மருந்தை உபயோகிக்க வேண்டுமென உள் விவரங்களையும் உள்ளங்கை நெல்லிக் கனியென மானிடர்க்கறிவுறுத்தி, மானிடர் தம் அறிவின்மையால் தம் துக்கங்களை விருத்தி பண்ணிக் கொள்வதைத் தடுத்து, அவர்க்கு க்ஷேமத்தை வருவிக்க உலகில் ஆங்காங்கு செய்யப்படும் எவ்வித முயற்சிக்கும் இப்பத்திரிகை கருவியேயாகும். ஆதலால் எக்கருத்துக் கொண்டும், எவ்வித ஸமயவழியாக வாயினும் உலகின் உபத்ரவங்களைத் தீர்ப்பதற்கு வேண்டிய யுக்திகள், மார்க்கங்கள், யோசனைகள் இவற்றைப்பற்றிய வியாஸங்கள் ஏற்றுக் கொள்ளப்படும், ஆகவே உலகில் எல்லா விடங்களினின்றும், ஸகலவித உபத்ரவங்களும் நீங்குமாறு செய்யப்படும் எல்லாப் பிரேரேபணைகளின் செய்திகளும் இப்பத்திரிகையிற் காணலாம். ஏனெனின் உலகின் க்ஷேமத்தைக் கருதிச் செய்யப்படும் எவ்விதப் பிரயத்தனமும் நம் பரமாசார்யனை அடைதற்குச் செய்யும் முயற்சிகளில் ஒன்றாகுமன்றோ? இவ்வாறுய பொது விஷயங்கள் தவிர இப்பத்திரிகையில் வித்யா விஷயமான கருத்துகள் விசேஷமாய்ப் பிரகாசிக்கும். வித்யை யென்பது ஜீவனிடத்தில் ஆன்மாவின் பிரகாசமாகிய உயர் வாழ்வை அவனது கீழ் உபாதிகளில் பிரதிபிம்பித்து பிரத்தியக்ஷமாய் விளங்கும்படி செய்விக்கும் கருவியேயாகும். ஆதலின் வித்யாப்யாஸ முறையானது குழந்தைகளிடத்தில் உண்மையில் உள்ளதாகிய ஈசுவரத் தன்மையாகும் பெருமையைப் பிரகாசப்படுத்துவது மாத்திர மல்லாமல் ஒவ்வொரு சிறுவனும் தன்னிடம்போலப் பிறரிடத்தும் கடவுள் அவரவர் ஹிருதயகுகையில் வாஸஞ்செய்து நடத்தி வருகிறாரென்பதை யுணர்ந்து, பிறரையும் தெய்வத்தின் ஸ்வரூபங்களென அன்பொடு நடத்த வழிகாட்டும் கருவியேயாதல் வேண்டும். கல்வி கற்றலாவது பிறர்க்கு உபகாரம் புரிவதில் நம்முடைய சக்திகள் யாவையும் உபயோகிக்கும்படி நம்மைப் பக்குவப் படுத்திக் கொள்வதே என இப்பத்திரிகை உள்ளங்கை நெல்லிக்கனி யென

எடுத்துக்காட்டி, அவ்விஷயமாக முன்னமே வெளி வந்திருக்கும் "கல்வி கற்பித்தல் ஈசுவர கைங்கர்யமே" என்னும் நூலில் காட்டியிருக்கும் கருத்துக்களை வற்புறுத்தி, பின்னும் அவற்றை விஸ்தாரமாய் தனித்தனி ஒவ்வொருவரிடத்தும் பிரயோகிக்கவேண்டிய மாதிரிகளைப் பற்றிய அம்சங்களையும் விவரித்து நிர்ணயஞ் செய்யும். இன்னும் நம் பத்திரிகையில் அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றிப் பிரஸ்தாபங்கள் வெளிப்படும்.

(1) உலகில் பற்பல அரசாங்கங்களிலும், ஜாதி, கோஷ்டி, வியவஹாரங்களிலும் ஏற்பட்டு நிற்கும் அநேகம் கட்சிகள் இவைகளின் குறைவு நிறைவுகள், அவை வருங்காலத்தில் எவ்விதம் உபயோகப்படும் என்பது.

(2) உலகின்கண் உள்ள பற்பல ஜாதியார்களின் தனித்தனியாகவுள்ள குணங்கள் அநேக ஜாதியார்களின் நடையுடை பாவனைகளாகிய ஸ்வபாவங்களும் லக்ஷணங்களும்.

(3) இச்சங்கத்தின் மெம்பர்கள் சஞ்சரிக்க விரும்பும் பற்பல ஸ்தலங்களும் யாத்திரைக்கு யோக்யமான ஸ்தானங்களும்.

(4) சிற்பம், உலகில் பற்பல பாஷைகளிலுமுள்ள காவ்யங்கள், பிரத்யக்ஷ விசார சாஸ்திரங்கள் இவற்றின் வருங்காலத்திய அபிவிருத்தியும் அதின் அவசியமும்.

(5) உலகின் ஸகல வியவஹாரங்களுக்கும் ஆதாரமான மூலஹேதுக்களை அறிந்து கொள்ளுதற்கு ஓர் வழியாகும் நாடகம் என்பதும், உலகில் குறைந்த நாகரிகமுடைய ஜாதியார்களின் குறைவுகளும், அவர்கள் அபிவிருத்தி யடையும் உபாயங்களும், நாம் மிருகாதிகளையும் செடி கொடிகளையும் எவ்விதம் நடத்திப் பரிபாலிக்க வேண்டுமென்பதும்.

(6) உலகில் கல்வி, செல்வம் முதலியவற்றால் மேன்மையடைந்தவன் தாழ்ந்தவனை நோக்கி நிறைவேற்ற வேண்டியகடமைகளும்.

(7) ஸங்கிதத்தின் பிரயோஜநமும் அதன் அபிவிருத்தியும்.

(8) ஆத்ம விசாரமும் வியாபாரம் முதலிய உலகவிஷயமும்.

(9) இவை யன்றி இப்பத்திரிகையில் மூன்று மாதத்திற்கொருதடவை ஒவ்வொரு தேசத்தினுடைய ஜெனரல் செக்ரிடரியிட

யிருந்து வரும் ரிப்போர்ட்டுகளைக் கொண்டு உலக முழுமையிலும் இம்மஹா ஸங்கத்தின் அபிவிருத்தியைக் காட்டுவதற்குத் தக்க படங்களும் சமாசாரக் கொத்துக்களும் வரையப்படும்.

ஆகலின் இப்பத்திரிகையை இம்மஹாஸங்கத்திற்கு எவ்வாற்றானும் தகுதியுள்ளதா யமைப்பதற்கு வேண்டிய ஸகல பிரயத்நங்களும் செய்யப்படுகின்றன. பத்திரிகையின் அட்டைகளும் இச்சங்கத்துத் தலைவர் சங்கத்திற்கு அடையாளமாக உரியதென்று ஏற்படுத்தி யிருக்கும் வர்ணத்தையுடையதா யிருக்கும். பத்திரிகையை அச்சுப்போடும் விஷயமாக அதின்கண் அப்போதைக் கப்போது பதிப்பிக்கப்பெறும் சித்திரங்கள் வரையப்படும் விஷயத்தில் அவ்வவ்வேலையில் வல்லுனர்களின் யோசனையின் பேரில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

இவ்விதமாகப் பத்திரிகையை விஸ்தாரம் செய்யும் பிரயத்நமானது மிகுந்த ஆடம்பரமுடையதேயாகும். ஆயினும் இம்முயற்சியைக் கையேற்ற நம் தலைவர் இதன் செலவுக்கு வேண்டிய திரவியம் இன்ன ஆது மென்பதையும், அது எவ்வளவு மட்டும் பின்னர் விலையாகு மென்பதையும் ஆழ்ந்து யோசனை செய்யாமல் இதை ஆரம்பிக்கவில்லை. இதன் ஆரம்பத்தில் ஐயாயிரம் பவுன் (ரூ 75,000) வரை செலவழிக்கப்படவேண்டியிருக்கிறது. ஆயினும் இப்பெரும் முயற்சியை யாவரும் அங்கீகரிப்பார்கள் என்பதற் கடையாளமாக இதற்குள்ளேயே இரண்டு புண்யசாலிகள் வருஷம் ஒன்றுக்கு 300 பவுன் வீதம் ஐந்து வருஷத்திற்கு உதவி புரிவதாய் வாக்களித்திருக்கிற விவரம் நண்பர்களுக்குத் தெரிவித்தற்பாலது. இவ்விருவருள் ஒருவர் இச்சங்கத்தில் மெம்பர் கூட அல்லர். இஃதன்றியும் சொற்ப சொற்பமான நன்கொடைகளும்வந்துகொண்டிருக்கின்றன. ஆதலின் இதைக்கேள்வியுற்று யாவரும் இப்பத்திரிகை ஆரம்பத்திற்கு வேண்டிய மூலதிரவியம் வந்து சேருமாறு எவ்வாற்றானும் தம்மாலியன்றவளவு முயற்சி செய்ய வேண்டும். ஒரு தேசத்தில் ஜநங்களுடைய பாஷை இங்கிலீஷாயினும் இல்லாவிடினும் நமது பத்திரிகை அத்தேசத்திற்கு அவசியமாகும். ஏனெனில் இம்மஹா ஸங்கத்தின் கருத்துகள் எவ்விடத்தினும் பரவுவதற்கு இது இன்றியமையாத ஓர் கருவியா யேற்படுவது மன்றி உலகின் கார்யாதிகள் எவற்றிற்கும் மானிடர்படும் துன்பங்களுக்கு நிவர்த்தி யுபாயங்கள் தற்கால நாகரிகத் தின்படி நூதநரீதியாய் அமைவதற்கும் முக்கியமான

ஓர் ஹேதுவாய் விளங்கி வருமென்பது திண்ணம். இக்காலத்தினியற்கையைச் செவ்வையாய் அறிந்து தெளிந்த வித்வான்கள், அதிகாரிகள் முதலிய பெரியோர்களிடமிருந்து தக்க யோசனைகள், அபிப்பிராயங்கள், யுக்திகளை சமயந்தோறும் சம்பாதித்துப் பிரசுரப் படுத்துவதற்கு இப்பத்திரிகை தகுதியுடைய தாகும். ஆதலின் தேவையுள்ள பொழுதெல்லாம் சங்கத்தின் மெம்பர்களும் மற்றோரும் எல்லா வல்லமையுமுள்ள பரமாசாரியன் வருகையை நோக்கிச் செய்யும் முயற்சியின் அடியாக இப்பத்திரிகையில் கூறும் விஷயங்களையும் பேசும் வியவஹாரங்களையும் மொழி பெயர்த்தலின் வாயிலாக உலகிலுள்ளோர் யாவரும் எப்பாஷை பேசுவோரும் தெரிந்து கொள்ளத் தடையிராதன்றோ!

உலக முழுமையுமுள்ள பிரதி தேசகாரியதரிசியும் தத்தம் தேசங்களில் ஜநஸமூஹத்திற்கு ஜநங்களின் தொழின்முறை பற்றிய பல துறைகளிற் சீர்திருத்தங்களை விவரமாய் வியவஹரிக்கக்கூடியவர்கள் இப்பத்திரிகைக்கு விஷயதானஞ் செய்பவர் உளரேல், அத்தகையர்களின் வியாஸங்களை இம்மஹாஸங்கத்தின் தலைவருக்கு அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஒவ்வொரு தேசத்தார்க்கும் இச்சபைசம்பந்தமான வியவகாரங்களை அவரவர் தேசத்திற்[illegible]மட்டும் பிரஸித்தப்படுத்துவதற்கே திரவிய[illegible]பேக்ஷை இருக்கின்ற இக்காலத்தில் நம் தலைவர், அநேக தேசஸ்தர்களை, மேற்கண்ட அரும் பெருங்காரியத்தை உத்தேசித்து, திரவிய ஸஹாயம் செய்யும்படி அவ்வத்தேசத்தார்களுடைய ஸபைகள் மூலமாகக் கேட்டிருக்கின்றார். ஆயினும், இனி நக்ஷத்ர தூதன் எனும் பத்திரிகைநாநாவித விஷயங்களை அநேகதேசஸ்தர்களான கல்விமான்கள், அநேக சமய சாஸ்திர நிபுணர்கள் முதலான அறிவாளிகள் பலரைக் கொண்டு வியவஹரிக்குமாகையால் உலகமுழுமைக்குமே அதன் பிரயோஜநம் எண்ணிறந்ததென நம் தலைவர் கருதுகின்றார். ஆகையால் இவ்விஷயத்திற்கு இப்போது அத்தியாவசியகமாய் வேண்டியதற்கு உதவும் திரவியம் எவ்வளவாயினும், பின்னர் அதைப் போல் பன்மடங்கு நலம் விளையும் என்பதில் ஐயமில்லை. அஃதாவது இப் பத்திரிகை மூலமாய் உலகத்தினர் இம்மஹா சபையின் தத்துவார்த்தங்களை நன்றாக அறியக்கூடிய சமயம் வாய்க்கத்தக்கது. இம்மஹாஸங்கத்தின் நோக்கமும் இத்தகைய நலம் விளைப்பதே.

ஆகையால் நம் தலைவர் வேண்டுவதென்னவெனின், ஒவ்வொரு தேச காரியதரிசியும் ஒவ்வொரு பண்டு ஏற்படுத்தி வசூலிக்கப் பெறும் தொகையை அப்பொழுதைக்கப்போது வசூலித்தவுடன்

"82,Drayton Gardens,
London, S. W. England."

என்னும் விலாசத்திற்கு அவருக்கு அனுப்பிவரவேண்டுமென்பதே. 1914ளு ஜனவரிமீ 11உயில் "நக்ஷத்திர தூதன்" பிரஸித்தப்படுத்த வேண்டியதை உத்தேசித்து இப்பொழுதே அது சம்பந்தமான வேலைகள் நடைபெற வேண்டியிருக்கின்றமையால் எவ்வெவ் விடங்களினின்று எம்மட்டு ஆதரவு வரக் கூடியதென்று அறிய விரும்புகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,
ஜார்ஜ் எஸ். அருண்டேல்,
பிரைவேட் சேக்ரிடரி.

குறிப்பு.

நக்ஷத்திரதூதன் தபாற்கூலி யுள்பட. ளு சந்தா ரூ 4—8—0 தனிப்பிரதி அணா 8. பத்திரிகை அடைய விரும்புவோர் அதின் சந்தாத்தொகைகளை

B. P. Wadia Esq.,
MANAGER, Theosophical Publishing House,
Adyar, MADRAS.

என்ற விலாசத்துக்கும் மேற்கூறிய பொருள் உதவிகளை

National Representative
Gnana Geha,
Benares City, M. P.

என்ற விலாசத்திற்கும் அனுப்பவேண்டும்.

இச் சபைக்குத் தமிழ்ஜில்லாக்களுக்குக் காரியதரிசி அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., ஐகோர்ட்டு வக்கீல், மதுரை. அவர்களிடமிருந்து இச் சபை சம்பந்தமான எல்லா விஷயங்களையுங்குறித்து எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

# உயர் லக்ஷ்யங்களின் பிரயோஜநம்.*

## Importance of High Ideals.

" விஜ்ஞாநமயோயம் புருஷ:॥ "

(இ-ள்) சிந்தனையின் வடிவமே புருஷன்.

"யோ யச்ச்ரத்த: ஸ ஏவ ஸ:॥"

(இ-ள்) எவனுக்கு எவ்விதமான ஆழ்ந்த கருத்து உளதோ அவ்விதமே யாகிறான்.

மேற்கூறிய வசனங்கள் இக்காலத்திய மனோதத்துவசாஸ்திரத் (Psychology) திற்கு முற்றும் ஒத்திருக்கின்றன. அதன் பிரகாரம் எக்காரியத்திற்கும் மூலகாரணமாயிருப்பது எண்ணங்களேயாம். நம் ஒவ்வொருவருக்குள்ளும் திரிவித சக்திகள் உள்ளன. அவை யாவன, (1) இச்சை (Will), (2) இச்சித்ததை அடையத்தக்க மார்க்கங்களை யோசித்தல் அல்லது ஞானம் (Wisdom), (3) யோசித்துத் தீர்மானித்த மார்க்கத்தில் பிரவிர்த்தித்தல், அதாவது கிரியை (Activity). ஆகவே கார்யங்கள் என்பன இச்சா சக்தியால் நம்மனத்தில் எழும் எண்ணங்களின் பரிணாமமே தவிர வேறல்ல. இதுபற்றி ஒருவனுடைய எண்ணங்களை யநுஸரித்தே அவன் காரியங்களும்; ஒரு ஜநஸமூகத்தின் பொது நோக்கத்தை யநுஸரித்தே அதன் பொது லாபநஷ்டங்களும் நிகழ்கின்றனவென்பது ஸித்திக்கின்றது. உதாரணமாக சித்திரக்காரன் ஒருவன் தன் மனத்தில் ஒரு நல்ல ரூபத்தைக் கற்பித்துக் கொண்டே கொஞ்சம் கொஞ்சமாய்ச் சித்திரித்துக் கடைமுறையில் தன் கருத்திற்கொண்ட ரூபத்தின் பூர்ணவடிவை வெளியிட ஒரு நேர்த்தியான படம் ஏற்படுகிறது. பிரான்சு தேசத்தின் ஜநஸமூகத்தாருக்குள் ஸ்வாதீனம்பெறவேண்டும் என்ற ஒரே பொது நோக்கம் பிரகாசித்து விளங்கினமையால் அத்தேசம் ஐரோப்பாகண்டத்துச் சுற்றுப் பக்கமுள்ள நாடுகளை ஜயித்து வெற்றிக்கொடி நாட்டியது. எக் காரியங்களுக்கும் முன் நிகழ்வன எண்ணங்களே. எண்ணங்கள் காரியங்களின் ஸ்ருஷ்டிகர்த்தா. கார்யங்கள் எண்ணங்களின் சிருஷ்டியாகும்.

---

*Translation of the article "The Importance of the Ideal" in the issue of August 1913 of the Young Citizen by Mrs. Besant.

2. எண்ணங்களுக்குள் பற்பல வகை உண்டு. சில எண்ணங்கள் குறிப்பற்றனவாயும், தெளிவற்றனவாயும், அற்பமாயும், சஞ்சலமாயும் உள்ளன. அதனால் அவை ஒருவனுடைய சீலத்தில் யாதொரு மாறுதலையும் ஏற்படுத்த இயலா. மற்றவை உறுதியும் திடமுமான எண்ணங்களாம், அவை சீலத்தைத் தாக்குகின்றன. மநோதத்துவ சாஸ்திரத்தின் பிரகாரம் மேற்சொன்ன திடமான எண்ணங்கள் மநஸை அடக்கியாளும் இயல்பின. அவை மநத்திலேயே குடியிருக்கும் இயல்பின. எத்தகைய யுக்திவாதங்களுக்கும் எவ்விதச் சோதனைகளுக்கும், எவ் வாசைகளுக்கும் வசப்பட்டு இவ் வெண்ணங்கள் மநத்தினின்று அகலா. இவ் வெண்ணங்கள் குற்றமற்றனவாயும், பிரபஞ்ச நியதிகளுக்கு முரணுமல் அவைகளுக்கு சேர்மையாயும் இருக்குமாகில், இத்தகைய மேன்மையான எண்ணங்களைக் கொள்வோர் ஸந்மார்க்க முறையில் உயர்ந்த படிகள் ஏறுவதற்கு ஸாதகமாயிருக்கும். அவ்வெண்ணங்கள் குற்றமுள்ளனவாயின் உன்மத்தனுக்கி அதோகதியிற் சேர்ப்பிக்கும்.

மேற்கூறிய நல்லெண்ணங்களே இவ் வியாஸத்தின் தலைப்பெயரான உயர் லக்ஷ்யங்களாம். அவை மனிதனுடைய சீலத்தில் விசேஷ குணங்களை யேற்படுத்தி ஸதாசாரத்தில் பிரவிர்த்தியைத் தருகின்றன. உயர்லக்ஷ்ய மில்லாதவன் ஸம்ஸார ஸாகரத்தில், அதாவது உலக வாழ்வில் சுக்கான் இல்லாத படகுபோல் தவிக்கிறான். விருப்பு வெறுப்பின் பயனுப ஸுகதுக்க ஸம்பவங்களாகிய அலைகளால் மொத்துண்டு, திக்கற்றவனுப், கரையேற முடியாமல் மயங்குகிறான். குறித்த உயர் லக்ஷ்யத்தைக் கொண்டவனே, தன் குறிய்யை எப்போதும் முன் நிறுத்தி நேராகச் செல்லுகிறான். சற்று சோர்வடைந்தாலும் பின் இன்னும் அதிக வேகத்துடன் லக்ஷ்யத்தை நோக்கிச்சென்று கரையேறுகிறான். தன்னுடைய தீவ்ரமான தைர்யகுணத்தால் ஸுகதுக்க ஸம்பவங்களுக்குட்படாமல் அவைகளை மேற்கொள்ளுகிறான். அவன் கப்பல் சுக்கான் உள்ளது.

வாலிபர்களைக் கற்பிப்பதில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமொன்றுளது. அஃதாவது அவர்கள் மநங்களில் முற்கூறிய உயர் லக்ஷியங்களை அமைத்தல் வேண்டும். அவர்கள் மநங்களில் தம்

சொந்த தேசத்து ஸகலகுண விசிஷ்டர்களான தற்கால முற்கால நரசார்தூலர்களைப் பற்றியும் உயர்ந்த ஸ்திரீ ரத்நங்களைப் பற்றியும் அடிக்கடி நன்கறிவுறுத்தல் வேண்டும். இதை ஆவலுடன் கேட்கும் பிள்ளைகள் இச்சிரேஷ்டர்களை யெப்போதும் சிந்தையில் வைப்பார்கள். அவர்கள் எத்தகைய பெருமையுடையவர்கள் என அடிக்கடி சிந்தித்து மகிழ்வார்கள். சிறுவர்கள் தம்மில் எவ்வாறுய குணவிசயங்களை அபிவிருத்தி செய்துகொள்ள விரும்புவார்களோ, அவ்வாறுய குணங்களைத் தம்முடைய லக்ஷ்யத்தினின்று கிரஹித்து, குறித்த அக்குணங்களின் மூர்த்தியேயாகிறார்கள். இக்குண ஸ்வரூபத்தால் தீயதினின்றும் ஒழிந்து ஸமாதானம் பெறுவார்கள்.

நாம் ஏற்படுத்திக்கொண்ட லக்ஷியத்தைப் பிரதி காலையிலும் திடமான ஆவலோடும் தீவ்ரசிந்தனையோடும் தியானஞ்செய்யவேண்டும். இப்படிப் பிரதி காலையிலும் நினைந்து நினைந்து வர, நம்முடைய சீலத்தில், நம் இலக்ஷியத்தின் நல்லசுபாவங்களின் கருக்கள் வேரூன்றி வளர ஆரம்பிக்கும். இவ்வப்பியாஸத்தால், கொஞ்சமேனும் சிரமமின்றி, இலக்ஷியத்தின் குணவிசயங்கள் நம் சீலத்தில் பிரதிபிம்பிக்கின்றன. திட சங்கற்பத்தின் மஹிமை மிகப்பெரியதாகையால், வெகு குணங்களை விளைக்கின்றது.

இது போலவே, அஸத்யமான சிந்தனைகள், இழிவான சிந்தனைகள் இவை அவ்வவற்றிற்குத் தக்கபடி கெட்ட பலன்களையும் விளைக்கக்கூடியன. எத்தேசத்திலேனும் தீய அபிப்பிராயங்கள் நிகழ்ந்தால், அவை ஜனங்களின் சீலத்தை ஆக்ரமித்து, விஷப்படுத்தி எண்ணிறந்த கேடுகளை விளைக்கின்றன.

புஸ்தகங்கள், பத்திரிகைகள், கவிகள், நாடகங்கள், படங்கள் இவையெல்லாம் ஆழ்ந்த கருத்துக்களை வெளியிடுகின்றன. அவ்விஷயங்கள் நல்லவையாயிருந்தால், ஜனங்கள் ஸுசீலர்களாவார்கள். இல்லையாயின் ஜனங்களுடைய சீலத்தைக் கெடுத்துவிடும். பிறரை நாம் உயர்ந்த சிந்தனைகளால் நலப்படுத்துவது எவ்வாறு ஸாத்தியமோ, அவ்வாறே நம் தீய சிந்தனைகளால் பிறரை நாசமுறவும் செய்யலாம். சிறுவர்களுடைய மனஸ் மெல்லியது, நெகிழ்ச்சியுடையது. ஆகையால் அதை எண்ணங்கள் இலகுவாய்த் தாக்கக்கூடும்.

ஜநஸமூஹத்தில், ஸ்நேஹ பாவமும் ஸத்யமும் அன்பும் நீதியும் நிறைந்த மேன்மையான உபதேசங்களைப் பிரசுரம் செய்வதால் அந்த ஜநஸமூஹத்தார் சாந்தமும் ஸமாதாநமுமாக நடைபெறுவார்கள். பொல்லாததும், அற்பமும், இழிவுமான எண்ணங்களை வெளியிடுதல் நம் ஸ்வதேசமாகிய மாதாவின் க்ஷேமத்திற்கு ஹாநியையுண்டுபண்ணும். ஆகையால் பிரபஞ்சத்தில் நிகழும் சக்திகளுக்குள் ஸங்கல்பசக்தி என்பது ஒரு மஹத்தான சக்தி. அதை நாம் உபயோகிக்கும் முறைக்குத் தக்கபடி அது நன்மையான காரியங்களையோ அல்லது தீய காரியங்களையோ விளைக்கும் இயல்பினது. தீய எண்ணங்களை உலகில் பரப்பி, மனுஷ்யர்களின் கார்யப் பிரவிர்த்தியை விஷப்படுத்துவோர் மனுஷ்யவர்க்கத்திற்கே கொடிய சத்துருக்களாவர்.

**B. S. R. சுப்பிரமணியன்.**

---

## நன்மொழி.

பிறரிடம் குற்றம் காணல், குணம் காணுதல் என இருவித சுபாவங்கள் நம்மெல்லோரிடமுமுண்டு. முன்னது. வேற்றுமைப்படுத்தும் தன்மைபது. பகைமையை உண்டுபண்ணும் இயல்பினது. பின்னது, எல்லாம் ஈசுவர ஸ்வரூபங்களெனவும் எல்லாம் ஈசன் செயல் எனவும் நினைப்பதின் கார்யமாகும். உலகத்தின் பிரகிருதிநிலைமையில் முன்னதைத் தவிர்த்து பின்னதை ஒழுகத்தில் கொள்ள வேண்டியது. பிறரிடம் யாதேனும் ஒருநலத்தைக் காண்க. பிறரிடம் குற்றத்தைக் காணற்க. கண்டாலும் அதைப்பற்றி உபேக்ஷையாய் நடைபெறுக. முத்துச்சிப்பியில் துர்நாற்றமுள்ள மாம்சத்தைத் தவிர்த்து முத்தைநாடித்தேடிக் கிரஹிக்கிறோம். அதுபோல் பிறரிடம் நலம் இருத்தலை விரும்பி நாடித்தேடிக் கண்டபின் சந்தோஷப்படுக. சந்தோஷம் என்பது ஒரு க்ஷணமேனும் தன்னை மறத்தலாம். அதன்மூலமாய் ஒருமையுணர்வு பெறுதலாம், இதனாலன்றோ கீதையில் பகவான், "எங்கே எங்கே நலம் இருக்கின்றதோ அங்கக்கே நான் இருக்கிறேன்" என்றார்? ஆனால் தீயவையில் அவர் இலரோ வென்றால், தீயவை வெறுப்பையுண்டாக்கும். வேற்றுமை எண்ணம் சம்பவிக்கும் துவைத நாட்டம் நிகழும். அதனால் ஈசனைக் காண வொண்ணாது. ஈசுவரன் ஒருமையுணர்வில் இருக்கிறார். எதைச் சந்தித்தாலும், அதில் "நன்றே நினைமின்" என்றார் திருமூலர், "ஈசனெனக் கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நினைந்து கொள்" என்றார் ஔவையார். இதுவே பிரஹ்ம ஞானதர்சனத்தின் உபதேசம்.

# பிரஹ்மஞான தர்சனம் (பாலபாடம்.)

(218-ம் பக்கத் தொடர்ச்சி)

## 7-வது அத்தியாயம்.

## கர்மம்.

1. ஒரு காலத்தில் ஒரு கரடி தன்னுடைய மூன்று சிறு குட்டிகளுடன் காட்டுக்குள் இரை தேடித்திரிந்தது. அங்கே ஒரு மரத்தின் கிழே யிருந்த ஒரு தொட்டியில் கொஞ்சம் தேன் இருக்கக் கண்டது. ஆனால் அம்மரக்கிளையி லிருந்து தொட்டிக்கு நேராக ஒரு பெரிய கட்டை தொங்கிக்கொண்டு அத்தொட்டியின் மேல் வாயை ஏறக்குறைய தொட்டுக்கொண்டிருந்தது.

2. கரடிகளுக்குத் தேனில் அதிகப் பிரியம். ஆனால் அதற்கு கட்டை இடையூறா யிருந்தது. அதனால் தாய்க்கரடி அக்கட்டையைப் பிடித்துத் தள்ளிவிடவே அவைகளெல்லாம் தேனைச் சாப்பிட ஆரம்பித்தன. தள்ளப்பட்ட கட்டை ஊசலாடுவது போல் கொஞ்சதூரம் போய்த் திரும்பிவந்து அதன் தலையில் இடித்தது. கரடிக்கு அதிக கோபமுண்டாகி அக்கட்டையை மிக மூர்க்கத்துடன் வெளியே பிடித்துத் தள்ளியது. அக்கட்டை முன்னைவிட அதிக தூரம் போய் மகாவேகமாய்த் திரும்பி வந்து ஒரு குட்டியின் பேரில் மோதி அதைக் கொன்று விட்டது.

3. அப்போது தாய்க்கரடி வெளியேறி தன் பூர்ண பலத்துடன் அக்கட்டையை அடித்துத் தள்ளிற்று. கட்டை மகா வேகமாய் வெளியே போய் சூறைக் காற்றுப்போல் திரும்பி வந்து அக்கரடியின் தலையிலடித்து அதையுங் கொன்று விட்டது. தாயை இழந்து பயத்தால் நடுநடுங்கும் இரண்டு சிறு குட்டிகள் இப்பெரிய உலகத்தில் தனிமையாய் விம்மி யழும்படி நேரிட்டது.

4. ஐயோ! பரிதாபம்!! இக்கிழக்கரடிக்கு அந்தக் கட்டையைத்தான் பிடித்துத் தள்ளினால் நிச்சயமாய் அது தனக்குத் துன்பம் பயக்குமென்ற விஷயம் தெரியாது. ஆகையால் அதன் பேரில் குற்றஞ்சொல்ல இடமில்லை. ஆனால் மனிதர்களாகிய நாம் அதைவிட நன்றாயறிவோம். நாம் செய்கிற ஒவ்வொருசெய்கையும் நம்மையே வந்தடையுமென்பதை நாம் அறிகிறோம். ஆகையால் நம்முடைய

பொறுமையை இழந்து நமக்கே திரும்பிவரக்கூடிய செய்கைகளைச் செய்து அதனால்துன்பமடைவோமாகில் அக்குற்றம் நம்முடையதே.

5. இப்படி வெளியிற்போய் நம்மிடமே திரும்பிவருகிற செய்கைகள் காரண காரிய நீதியின் வேலை அல்லது கர்மம். இதைக் கர்மமென்று சொல்லுகிறோம். ஏனென்றால் "காரியகாரண நீதி" என்ற வாக்கியத்தைவிட கர்மம் என்பது சுருக்கமான வார்த்தையாயிருக்கிறது.

6. கர்மம் அநேக விதமாயிருக்கிறது. ஆனால் நம்மில் அநேகர் "நல்லகர்மம்", "கெட்ட கர்மம்" என்று இரண்டு வித கர்மங்கள் மட்டுமிருப்பனபோல் பேசுகிறோம். நமக்குத் துன்பத்தையுண்டு பண்ணுகிற அல்லது கிலேசத்தைத் தருகிற காரியம் நமக்கு நேரிடுமாகில் அதைக் கெட்ட கர்மமென்று சொல்லுகிறோம். நமக்கு இன்பமான விஷயம் நேர்ந்து சந்தோஷத்தைத் தருமாகில் அதை நல்ல கர்மமென்று சொல்லுகிறோம். நாம் இவ்விதம் பேசும் போதும் நினைக்கும்போதும் ஒரு தப்பிதம் செய்கிறோம். கெட்ட கர்மமென்பது கிடையாது.

7. நமக்கு நேரிடுகிற ஒவ்வொரு விஷயமும் நியாயமாகவும் நம்முடைய நன்மைக்காகவும் உண்டாகிறது. அது நாம் வெறுக்கத்தக்க கர்மமாயிருந்தால் அது நம்முடைய தப்பிதங்களை யெடுத்துக்காட்ட வந்திருக்கிறதென்றும் அல்லது இனி துன்மார்க்கத்திற் செல்லாமல் நம்மைத் தடுப்பதற்காக வந்திருக்கிறதென்றும் நிச்சயங் கொள்ளலாம். அது நாம் விரும்பத்தக்க கர்மமாயிருந்தால் நாம் செய்தது நியாயமென்பதைக்காட்ட வந்திருக்கிறது என்றும் நிச்சயங் கொள்ளலாம். மேலும் கர்மத்திற்கு நம்மைப்பற்றி யாதொன்றும் தெரியமாட்டாதென்பதை நாம் மறக்கக்கூடாது. அது ஒருவரையும் நேசிக்கிறதுமில்லை, விரோதிக்கிறதுமில்லை. ஒருவருக்கு வெகுமதியையும் மற்றொருவருக்கு தண்டனையையும் கொடுக்கிறதில்லை. அதற்குக் கோபமுமில்லை, சந்தோஷமுமில்லை. அது நீதி முறை. சலநத்தை யுண்டுபண்ணுகிற ஒவ்வொருவராலும் ஒவ்வொரு வஸ்துவினாலும் கர்மம் நிகழ்கின்றது. அதாவது அந்நீதிமுறை நடந்தேறிவருகிறது.

304


8. கர்மத்துக்கு நம்மைப்பற்றி யாதொன்றும் தெரியமாட்டாதென்று முன்னமே சொன்னோம். நம்மைச் சுடுகிற நெருப்பு நம்மையறியுமா? இல்லை. சுடுவதும் உஷ்ணத்தைக் கொடுப்பதும் நெருப்பின் சுபாவம். அதற்குக் கொஞ்ச தூரத்தில் பத்திரமான இடத்தில் நீ இருந்தால் உனக்கு சௌக்கியத்தையும் வெளிச்சத்தையும் கொடுக்கும். நம்முடைய அன்னத்தைப் பக்குவப் படுத்தும். நாம் தள்ளிவிடவேண்டிய வஸ்துக்களை எரிக்கும். ஆனால் நீ அதற்கு வெகு சமீபத்திற்போய் அதைத் தகாதபடி உபயோகித்தால் அது உனக்குத் துன்பங்கொடுக்கும். எரித்தல் அதன் செய்கை. எரித்தலினாலுண்டாகும் பயனைப்பற்றி அதற்கு ஒன்றும் தெரியமாட்டாது. அந்தப் பயனைத் தெரிந்து கொள்ளவேண்டியது நம்முடைய கடமை. இந்த விஷயத்தில் நாம் ஒரு தப்பிதத்தைச் செய்துவிட்டு நெருப்பின்பேரில் கோபங்கொண்டு குற்றஞ்சாட்டுவது நம்முடைய அறிவீனம்.

9. கிறிஸ்து வேத புஸ்தகத்திலுள்ள அடியிற்கண்ட வாக்கியங்கள் இங்கு கவனிக்கத்தக்கவை:—"ஏழைகளின் அழுகைக் குரலைக் கேளாமல் காதை யடைத்துக் கொள்ளுகிறவன் தானே அவ்விதம் அழுதும்படி சம்பவிக்கும். அப்போது ஒருவரும் அவனுக்கு உதவார்கள்." "ஆசைகளை யெல்லாம் வென்றவனை கடவுள் சந்நிதியில் முக்கியஸ்தனாகச் செய்வேன். அவன் புநர் ஜந்மம் அடையமாட்டான்" "மோசம் போகாதே. கடவுளை யேமாற்ற முடியாது. எவன் எதை விதைக்கிறானோ அவன் அதை யறுப்பான்."

10. நம்மைச்சுற்றி பேதங்களையும் சமமின்மையையும் பார்க்கிறோம். சிலர் ஐசுவர்யவான்களாயும் மற்றவர்கள் ஏழைகளாயும் சிலர் இலக்ஷணமுள்ளவர்களாயும் வேறு சிலர் குரூபிகளாயுமிருக்கிறார்கள். தன் ஜீவகாலம் முழுமையும் துன்பத்தையே அநுபவிக்கிற நோயாளிகளையும் துன்பமென்பதே தெரியாத பலமும் சௌக்கியமுமுள்ள ஜநங்களையும் பார்க்கிறோம். கர்மத்தைப் பற்றி நாம் அறிந்துகொண்டிருப்பதினாலே இவைகளின் முகாந்தரங்களை நாம் அறிகிறோம். அதாவது ஒவ்வொருவனும் தான் விதைத்தபடி

யறுக்கிறுனென்பதாம். மேலும் இதனுல் ஒரு புதிய பாடத்தைக் கற்றுக்கொள்ள ஒரு சந்தர்ப்பம் அவனுக்குண்டாகிறது. பிறருக்கு உதவி புரிய சந்தர்ப்பம் நேர்ந்தால் அதை நாம் இழந்துவிடக் கூடாது. அது நமக்குத் தற்செயலாய் நேரிடுகிறது.

11. உதாரணமாக:—ஒருவன் மதுபாநம் செய்த வெறியினுல் குழியில் விழுந்து கிடப்பதை நாம் பார்ப்போமாகில் அப்படி கிடப்பது அவன் கர்மம் தான். அது அவன் குடித்த கர்மத்தின் பயன். ஆனுல் அக்குழியிலிருந்து அவனை தூக்கிவிடவேண்டியது நம்முடைய கர்மம். அப்படிக் கர்மம் நமக்கில்லாவிட்டால் அவனை நாம் பார்த்திருக்கமாட்டோம். அப்படி யவனைப் பார்த்தபிற்பாடு அவனுக்கு நாம் உதவி செய்யாவிட்டால் கெட்ட கர்மம் நம்மை வந்தடையும். நமக்கு உதவி செய்யவேண்டிய காலத்தில் ஒருவரும் உதவார்கள். நம்மை உல்லங்கனம் செய்பார்கள்.

12. பூர்வ கர்மத்தின் பலனுக பணக்காரர்கள் செல்வத்தையும் ஏழைகள் தரித்திரத்தையு மடைந்தார்கள். இதில் நீதிக்குறைவு ஒன்றுமில்லை. பாரபக்ஷமில்லை. ஆகையால் நாம் ஏழையாயிருந்தால் பணக்காரனைப் பார்த்துப் பொறுமைப் படுவதும் பணக்காரராயிருந்தால் கர்வமடைவதும் மூடத்தனம். இதே ஸ்திதி நமக்கு இனிமேலும் வாய்க்குமோ வாய்க்கமாட்டாதோ வென்பது நமக்கு இப்போதிருக்கிற ஸ்திதியை நாம் எப்படி உபயோகிக்கிறுேமென்பதைப் பொறுத்திருக்கிறது. பணக்காரர்கள் யாவரும் சரீரசௌக்கியமுள்ள யாவரும் சந்துஷ்டியுள்ளவர்களா யில்லையே. ஏழைகள் எல்லாரும் நோயாளிகளெல்லாரும் துக்கமுள்ளவர்களாகவே இல்லை. யார் சந்துஷ்டியுள்ளவர்களா யிருக்கிறுர்க ளென்பதைக் கவனித்துப் பாருங்கள். சந்தர்ப்பங்கள் எப்படி யிருந்தாலும் அவைகளை லக்ஷியம் செய்யாமல் எவர்கள் சந்துஷ்டியாயிருக்கிறுர்களோ அவர்களே கடவுளுடைய பள்ளிக்கூடத்தில் மேலான வகுப்பிலிருப்பவர்கள், அல்லது மேலான வகுப்புக்குப் போகிறவர்கள்.

(இன்னும் வரும்.)

வி. வெங்குசாமி ஐயர்.

# அஹல்யாசாப விமோசனம்.

(248-ம் பக்கத் தொடர்ச்சி.)

தசரதன்:—தங்களிடம் கூறத்தக்க தேதேனு முண்டோ? கொடை யென்ப தாசருக் கேற்பட்டுள்ள லக்ஷணங்களி லொன்றென்று தாங்க ளநேகம் தடவைகளில் கூறியிருக்கிறீர்கள். எங்கள் வம்சத்திற் கும் முக்கியமாயுள்ள தர்ம மதேயாகும். கொடையில் அதிக மேன்மையானதும் சகலரும் கண்டாச்சரியப்படத்தக்கதும், அத னால் உலகத்திற்கு நன்மையை விளைவிக்கத் தக்கதுமான ஒரு கொடையை நான் கொடுக்கவேண்டுமென்கிற அவா எனக்கு வெகு காலமாக இருக்கிறது. மேற்சொல்லிய குணங்களனைத்தையும் மேற்கொண்ட பொருளை யிதுவரையி லொருவரும் யாசித்த தில்லை. நான் என்னிடம் யாசகார்த்தம் வந்த மஹான்களனைவரையும் இவ் விதப் பொருள்களை யாசிக்கும்படி வேண்டிக் கொண்டிருக்கிறேன். அவர்களு மெத்தனையோ விதங்களான பொருள்களை யெல்லாம் யாசித்து மிருக்கிறார்கள். ஆனாலவைகளெல்லா மென் மனதிற் கிசைந்த கொடையாகத் தோன்றவில்லை. ஆனாலவ்விதப் பொரு ளேதேனு மென்னிட முண்டோ இல்லையோ என்பதே எனக்குத் தெரியாது. என்னை யாவர்கள் யாசிக்கிறபோதெல்லாம் "இவ்வளவு தானா" என்று தோன்றிற்றே யல்லாது, "ஆ, இது சரியான கொடை" என்றெனக்குத் தோன்றினதே கிடையாது.

இவ்விதம் தசரதன் சொல்லிமுடிக்குஞ் சமயத்தில், இவ்வுலகி லுள்ள சகல ஜீவராசிகளிடத்து மன்புபாராட்டும் விச்வாமித்திர முனிவரங்கு தோன்றினார். மஹரிஷியைக் கண்டதும் தசரதன் தனது சிம்மாஸனத்திலிருந்தெழுந்து வணங்கி அர்க்கிய பாத்தியா சமநீயாதிகள் கொடுத்து நல்வரவு கூறித் தகுந்த ஆசனத்திலவரை வீற்றிருக்கச் செய்தான். குசலப் பிரச்னாதிகள் சரிவர நடந்தே றியது. சகலரு மவரவர்களது ஆசனத்தி லமர்ந்ததும் வஸிஷ்ட முனிவர் விச்வாமித்திர முனிவரை நோக்கி, "தபோ நிதே! சற்று முன்பு தசரதன் மொழிந்ததையும் இத்தருணம் தாங்களிவ்விடம் விஜயம் செய்ததையும் குறித்து யோசித்தா லேதோ ஒரு விசேஷ மிருக்கிறதெனத் தோன்றுகிறது. இப்போதுதான் தசரதன் நிக ரற்ற ஒரு தானத்தைச் செய்யத்தான் வெகுநாளாக ஆவல்கொண்டி

ருப்பதாகவும், அதை யிதுவரை தீர்த்துவைப்போர் யாரு மில்லாத தாகவும், அதன் நிமித்தம் தனக்கொரு குறை யேற்பட்டிருக்கிறதாகவும் சொல்லிக்கொண்டிருந்தான். அவன் சொல்லி முடிந்ததும் தாங்களிங்கு தோன்றினீர்கள். அக்குறையைத் தீர்த்து வைக்கத் தங்களைத் தவிர வேறு யாரால் முடியும்? இப்பொழுது தாங்கள் வந்ததினால் தசரதனுக்கு குறை நீங்கின தென்றே நினைக்கிறேன்.''

விச்வாமித்திரர்:—இவ்வளவுதானா? நானென்னவோ என்றெண்ணியிருந்தேன். ஒரு தானம் கேட்கிறதுதானா பெரிய காரியம்? இது யாராற்றான் மாளாது?

வஸிஷ்டர்:—அப்படியல்ல. சகலரும் கண்டு ஆச்சரியப்படத் தக்கதாகவும், அதனால் ஜகத்துக்கொரு நன்மை யேற்படக்கூடியதாகவு மிருக்கவேண்டுமோ மத்தானம்.

விச்வாமித்திரர்:—கொடுப்பாரிருந்தால் கேட்பாருக் கென்ன கஷ்டம்?

தசரதன்:—மஹரிஷே! நான் கிருதார்த்தனானேன். அவ்விதத் தானத்தை நான் செய்யும்படிக் கென்னை யாசீர்வதிக்கவேண்டும்.

விச்வாமித்திரர்:—அதற்கென்ன, நான் கேட்பதில் தடையில்லை. ஆனால் நீ பிரியப்படுகிற மாதிரியான தானம் கேட்பதென்றால் அது உனக்கு நிரம்பவும் வேண்டியதாகத்தா னிருக்கும். அதை நான் கேட்கலாமோவென்றுதான் யோசிக்கிறேன்.

தசரதன்:—முனிவர! இதென்ன? இவ்விதம் தயங்குவானேன்? எனக்கு மிக்க பிரியமானதும் நானதிகமாக வெகுமதிக்கிறதாகவுமுள்ளதைத் தாங்கள் கேட்டு நான் கொடுத்தால்தானே என் மனதிற் குரிய தானமாகும். சாதாரணமான பொருள்களைக் கேட்டு நான் கொடுப்பதிலென்ன விசேஷமிருக்கிறது? ஆகையால் தாங்களெதை வேண்டு மென்றாலும் கேளுங்கள். ஆனால் தாங்கள் கேட்பதுமட்டும் சாமான்யமான பொருளா யிருக்கக் கூடாது.

விச்வாமித்திரர்:—தசரத! நன்குரைத்தாய். அவ்விதமே கேட்கின்றேன். ஆனால் நான் கேட்டபிறகு நீ கொடுப்பதற்குத் தயங்கலாகாது.

தசரதன்:—(சிரித்துக்கொண்டு) மஹாத்மாவே!! என்னை ஹேளனம் செய்கிறீர்கள் போலும். இக்ஷ்வாகு வம்சத்திலுதித்த ஒருவன் தான் பகர்ந்த மொழியினின்றும் பின்வாங்குவதுமுண்டோ? என்னுயிரைக் கேட்டாலும் நான் கொடுக்கச் சித்தமாயிருக்கின்றேன்.

விச்வாமித்திரர்:—சரி, அப்படியானால் கேட்கின்றேன். உனது வலது தொடையில் கோடி சூரியப்பிரகாசம் நிகழ்ந்தது போல் விளங்கிக்கொண்டிருக்கும் குழந்தை ராமனை எனது யாகம் மாரீசன் முதலான ராக்ஷஸர்களால் தடுக்கப்படாமல் நடந்தேறும் வண்ணம் கொஞ்சகாலம் என்னிடம் ஒப்புவிப்பாய்.

இம்மொழிகள் தசரதனுடைய செவிகளில் விழுந்ததும் திடுக்கிட்டான். உச்சிமுத லுள்ளங்கால் வரையில் நடுக்க மேற்பட்டது.

"யான்கண்டதுங் 'கேட்டதுங் கனவோ" வெனப் பிரமித்தான். இதென்ன ஆச்சரியம்! இவர் குழந்தை ராமனைக் கேட்பதாவது! என் மனதைப் பரிசோதிக்கிறாரா? குழந்தையைக் கொண்டு போய் இவரென்ன செய்யப்போகிறார்? ஓஹோ, சரிதான். குழந்தை வெகு அழகாயிருக்கிறான். அவ்வழகைப் பார்த்தவுடன் அவனைத் தன்தாச்ரமத்துக்கு அழைத்துக் கொண்டுபோய்க் கொஞ்சகாலம் வைத்துக்கொண்டிருக்கலா மென்கிற ஆசையா லிவ்விதம் கேட்கின்றார் போலும். இதென்ன ஆசை ரிஷிக்கு? பூர்வ ஞாபகம் கொஞ்சம் வருகின்றதோ? தன் குலத்துதித்த பாலன்மீது வாஞ்சை யேற்படுகின்றதோ? தான் ரிஷி யென்பதையே மறந்து விட்டாரோ? என்று யோசிக்க லாயினன்.

விச்வாமித்திரர்:—தசரத! என்ன யோசிக்கின்றனை? மனம் தளராதே. என் பிரார்த்தனை சரிதானா இல்லையா என்பதைக் குறித்து யோசனை செய்யத்தொடங்கினையானால் உன் புத்தி கட்டாயம் தவறும். யோசிக்காதே. இந்த மந்திரியான சந்தர்ப்பம்

மானிடர்களுக்குக் கிடைப்பது வெகு துர்லபம். உனக்குக் கிடைத்திருக்கிறது, அதை வீணாக்கிக் கெடுக்காதே. இப்போது தவறினாலினி யிம் மாதிரியான சந்தர்ப்ப மேற்படுமென்று நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. ஆகையால் சீக்கிரம் ராமனை யென்னுடனனுப்பு. என்னது வேள்வி சரிவர நடைபெறவேண்டும். தாடகை, சுபாஹு முதலியவர்களின் பாதையினின்றும் ரக்ஷிக்கப்படவேண்டும்.

தசரதன்:—"இதென்ன தாடகையாவது ராமனாவது? மஹரிஷி யினிவ்விதம் பிதற்றுகிறார்? தான் சொல்லுவது தனக்கே தெரியவில்லை போலும். இந்த தாடகைக்கெதிரில் ராமன் யுத்தம் செய்வானா? மாரீசனை யெதிர்க்க வல்லானா? இந்த தாடகையை என்னால் கொல்லமுடியாது. இம் மஹரிஷியாலு மெதிர்க்கமுடியாது. இவளை ராமனெப்படி யெதிர்க்கப் போகிறான்? இவரேதோ தவறிப் பேசுகிறார்" எனத் தன் மனத்தி லெண்ணி, வெளிப்படையாக "ஸ்வாமி! என்ன விளையாடுகிறீர்களா? ராமனாவது யாகத்தை ரக்ஷிக்கவாவது? சாதாரணமாக தாங்க ளாச்ரமத்திற் கழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று கேட்டாலே நான் அனுப்பச்சம்மதிக்க மாட்டேன். ராக்ஷஸர்களுக்கெதிரில் யுத்தம் செய்ய ராமனை யனுப்பென்றால் நானெப்படியனுப்புவேன்? என்னைத் தேவரீர் பரிஹாஸம் செய்கிறீர்கள் போல் தோன்றுகிறது. என் குழந்தை ராமனை விட்டு ஒரு க்ஷணம் கூடபிரிந்திருக்க என் மனம் சகிக்காது. அவன் பிறந்த பிறகு என் பிராணன் மீதுகூட எனக்கு வாஞ்சை யில்லை. என்னாவி யனைத்தையு மென் குழந்தைமீதல்லவோ வைத்திருக்கிறேன். அவனை விட்டுப் பிரிந் தெங்ஙனம் யானுயிர்தரித்திருப்பேன்? ராமன் தங்களுடன் வரவேண்டு மானால் நானுமவனுடன் வரவேண்டியதுதான்.

(இன்னும் வரும்.)

R. ஸ்ரீநிவாஸ ஐயர் M. A.

# துகாராம் பாவாவின் சரித்திரம்

310

## துகாராம், சிவாஜி, ராமதாஸ்.

(242-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

இவ்விதமாக துகாராமருடைய கீர்த்தி மகாராஷ்டிர தேசம் முழுமையும் பரவி, பண்டராபுரத்திற்கு நியமமாய் வருபவர்களில் இவர் ஒருவர் என்று ஏற்பட்டார். அவருடைய நல்ல நடத்தை, அளவற்ற வைராக்கியம், அவருடைய வாக்கு வைபவம் கீர்த்தனங்களைச் சொல்லும் சமயத்தில் பிறருக்கு போதம் உண்டாக்கும் சாமர்த்தியம் இவைகளை யெல்லாம் பார்த்தும் கேட்டும் ஜனங்களுக்கு அவரிடத்தில் ஒரு பூஜ்ஜிய புத்தி உண்டாயிற்று. மாகராஷ்டிர தேசத்தில் மகா பகவத் பக்தர்களில் இவர் ஒருவர் என்று எல்லாராலும் பாவிக்கப்பட்டார்.

இச்சமயத்தில் துருக்கர்கள் மகாராஷ்டிர தேசமுழுமையும் ஆக்கிரமித்திருந்தார்கள். அவர்களுடைய ஸ்வாதீனத்தினின்றும் தேசத்தைவிடுவிக்கும் பொருட்டு சிவாஜி பகீரதப்பிரயத்தினம்செய்து கொண்டிருந்தார். அவருக்கு பாலியம் முதல் கதை புராணங்களைக் கேட்பதில் வெகு ஆலக்தியுண்டு. ஆகையால் அவருடைய ஹிருதயத்தில் தர்மசம்பந்தமான விசாரமு மிருந்துகொண்டேயிருக்கும். சாது ஜனங்களைப் பார்க்கிறதும், அவர்களுக்கு வெகுமதி செய்வதும் அவர்களிடமிருந்து சத்விஷயங்களைக் கேட்பதும் அவருடைய வழக்கமாயிருந்தது. துகாராமருடைய கீர்த்தி வெகு விதமாய் அவர் காதில் விழுந்திருந்தது. அவர் மிகவும் சாத்விகர், பிராஹ்மணர்களால் பூஜிக்கப்பட்டவர்; அவர் ஜாதியில் சூத்திர மர்ராட்டியராயிருந்தும், கவநங்களைச் செய்தார்; அவருடைய கீர்த்தனைகளைப் போல் ஒருவரும் செய்யவில்லை. இவருடைய புஸ்தகங்களை பிராமணர்கள் ஜலத்தில் முழுகுவித்தும் 13 நாட்களுக்குப் பின் ஜலத்தினின்றும் நனையாமல் வெளிப்பட்ட இவ்வற்புதத்தையும் மற்றுமநேக விஷயங்களையும் சிவாஜி கேட்டிருந்தார். கோண்டபட்டர் துகாராமரைப்

பார்த்து தேங்காய் வாங்கிக் கொண்டு அதில் தனத்தைப் பெற்றுப் பிறகு பரம சிஷ்யனானான் என்று கேள்விப்பட்டது முதல் துகாராம ரைப்பார்க்க வேண்டும் என்ற ஆசை சிவாஜிக்கு வெகு பலப்பட்டது. ஒரு கடிதம் எழுதி குமாஸ்தாவிடம் கொடுத்து துகாராமரைக் கொண்டு வரும்பொருட்டு அந்த குமாஸ்தாவுடன் குதிரை, குடை முதலியவைகளையும் கொடுத்து அனுப்பினார். அச்சமயத்தில் துகா ராம் லோஹ கிராமத்திலிருந்தார். சிவாஜியினுடைய பத்திரத்தைப் பார்த்து அதற்குப்பதிலாக எட்டுக்கவனங்களைச்செய்துஅனுப்பினார். துகாராம் வாராததைக்கண்டு சிவாஜி துக்கப்படாமல், இந்த மஹா புருஷன் தன்னிடத்தில் வராவிட்டால் தான் அவரிடம் போக வேண்டும் என்று நினைத்தார். பிறகு ஒரு நாள் துகாராம் லோஹ கிராமத்திற்கு வந்த சமயத்தில் இரவும் பகலும் பஜனைகள் நடந்து வருவதை சிவாஜி ராஜா கேட்டு, அவ்விடம் போய் அவரை தரித் சிக்கவேண்டும், அவருடைய அற்புதமான உபதேசத்தைப் பெற வேண்டும் என்று நினைத்தார். தன்னுடைய முக்கிய உத்தியோக ஸ்தர்களுடன் லோஹ கிராமத்துக்கு சிவாஜி வந்து சேர்ந்தார். வந்த பின், வஸ்திரம், அலங்காரம், பூஜைக்கு வேண்டிய சாதனங் கள் இவைகளை எடுத்துக்கொண்டு முக்கிய மந்திரிகளுடன் துகா ராமருடைய தர்சநத்திற்கு வந்தார். அரசனும் மந்திரி மார்களும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து வெகு விலை பெற்ற வஸ்திரம், நகை கள், தங்க நாணயங்கள் நிறைந்த தாம்பாளம் இவைகளை அவர் முன்பாக வைத்தார்கள். சிவாஜி ராஜாவே தன் கையால் நெற்றி யில் வாசனைப் பொடியைத் தடவி, கழுத்தில் துளசிமாலையையும் பூமாலையையும் போட்டார். இந்தத் திரவியத்தை தன் முன்பாக வைத்ததைக் கண்டு துகாராமருக்கு வெகு வருத்த முண்டாயிற்று. உடனே ஏழு அபங்கங்களைச் செய்து அந்த நதரை தான் ஸ்வீகரி க்கவில்லை என்று சொன்னார். இந்த அபங்கங்களைக் கேட்டவுடன் சிவாஜி ராஜாவுக்கு வெகு ஆச்சரியம் உண்டாயிற்று. தான் அஷ்ட மந்திரிகளுடன் வந்து தன் கையால் பூஜித்து தானே தனத்தைக்

கொடுத்தும் அதை இலக்ஷியம் செய்யாமல் வைராக்கியத்தையே பாராட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து வெகு ஆச்சரியம் அடைந்தார். தான் மனஸ்தாபமடையாமல், தன் கௌரவ பாவத்தையே அதிகமாகக் கொண்டாடினார். பிறகு சிவாஜி ராஜா அந்த நகரைப் பிராமணர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அன்று இரவு ஒருவர் வீட்டில் துகாராம் பஜனை செய்வதாயிருந்தபடியால் சிவாஜிராஜா தங்கினார். அவர் வந்து உட்கார்ந்த பின் பஜனை ஆரம்பமாயிற்று. முதலில் சொல்லிய மங்களாசரணத்தைக் கேட்டே அரசன் திக்பிரமை அடைந்தார். பஜனைக்காக வந்த ஜனங்கள் தங்கள் சரீரத்தை மறந்து விட்டல் நாமஸ்மரணை செய்ய ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட அற்புதமான பக்திரசத்தை சிவாஜி ராஜா முன் பார்த்ததில்லை. இந்த பஜனையில் துகாராம் பிரபஞ்சத்தில் விட்டலரைத்தவிர வேறு ஒன்றும் பெரிதன்று, ஜன்மம் சாபல்லியமாகவேண்டுமானால் விட்டல் பக்தியைச்செய்யவேண்டும் என்பதை பலவிதமாய் நிரூபணம் செய்தார். இந்த உலகத்தின் ஐசுவரியம் நசுவரம். சுகம் அநர்த்தத்தைக் கொடுக்கத்தக்கது. ஜீவன் க்ஷணத்தில் போகக்கூடியதுஎன்ற இப்படிப்பட்ட விஷயங்கள் சுரோதாக்களின் சித்தவிர்த்தியில் பதியும்படி போதனை செய்ததைப் பார்த்து அரசன் மனதும் கலங்கிற்று. தான் ஸ்வயம் நல்ல மார்க்கத்திலிருந்தமையால் துகாராம் சொன்னது உடனே மநத்தில் ஸ்திரமாய் நின்றது. அவருடைய உபதேசம் மோக்ஷமார்க்கத்துக்குச் சாதநம் என்பதை அவர் நன்றாய் அறிந்தார்.

கீர்த்தனை முடிந்தபின் அரசன் துகாராமரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தான் இறங்கின இடத்துக்குப் போனார். அங்கிருந்து எழுந்து, காட்டுக்குப்போய்த் தனிமையாக உட்கார்ந்து துகாராமருடைய போதனையை மநநம் செய்தார். அவருடைய மந்திரிகள் அவரிடம் போய் தாங்கள் இப்படி உபரதி அடைவது சரியல்ல வென்று சொன்னார்கள். அதற்கு அரசன் சொன்னதாவது :—"நீங்கள் ஒருவரும் என்னிடம் வரவேண்டாம். உங்களு

க்குத் தோன்றியபடி இராஜ்ஜியவிஷயமாய் ஏற்பாடு செய்யுங்கள். என்னுடைய மநது அதில் சுத்தமாய் இனி பிரவேசிக்கமாட்டாது. ஆயுள் க்ஷணத்தில் முடிவு பெறலாம், எப்போது முடியும் என்பது நிச்சயமில்லை. ஆகையால் நான் எதுவரை ஜீவித்திருக்கிறேனே அதுவரையில் ஜன்மசாபல்லியம் செய்யவேண்டியது, இராஜ்ஜியம் முதலிய இஹலோக ஜாலங்களுக்கு உட்பட்டு மோக்ஷமார்க்கத்தை இரண்டாவது பக்ஷமாக்குவதில் எனக்கு இஷ்டமில்லை. அரசனுடைய இந்த வசநத்தைக் கேட்டவுடன் மந்திரிகளுக்கு பெரும் யோசனை வந்தது. இந்த சங்கதிகளையெல்லாம் அரசனுடைய தாயாரான ஜிஜாபாயி அம்மாளுக்கு எழுதி அனுப்பினர்கள். அந்த அம்மாளுடைய காதில் இது விழுந்தவுடன், அவள் வெகு சோகமடைந்தாள். உடனே லோஹ ஊருக்கு வந்தாள்.

அவ்வூருக்கு வந்தவுடன் துகாராமரை தரிசித்து, கைகூப்பி நிரம்ப வணக்கத்துடன் கேட்டுக் கொண்டதாவது:—ஸ்வாமி! சிவாஜி என் வயிற்றில் பிறந்தவன். எனக்கு ஒரே பிள்ளை. உங்களுடைய கீர்த்தனைகளைக் கேட்டு விரக்தி அடைந்து, இராஜ்ஜியத்தை விட்டு, காட்டில் போய் உட்கார்ந்திருக்கிறான். இப்போது அவன் சம்பாதித்த இராஜ்ஜியத்தை எவன் காப்பாற்றுவான். அது மறுபடியும் துருக்கர்களின் கையில் போய் ஹிந்து ஜநங்கள் அவர்களுடைய ஹிம்சையை சகிக்கும்படி நேரிடும். இருக்கட்டும். சிவாஜி வயிற்றில் ஒரு புத்திர சந்தாநம் உண்டாயிருந்தால் எனக்கு இவ்வளவு துக்கமிருக்கமாட்டாது. அதுவுமில்லை. என்குலம் க்ஷயமாகும். இவனிடம் ஏதாவது நதர் சுவாமிகள் பெற்றுக்கொண்டு இராஜ்ஜியத்தை விடாமலிருக்கும்படி போதிக்கவேண்டியது. இந்த விநயவசநத்தைக் கேட்டு துகாராம் அவளை சமாதானம் செய்து சொன்னார். சிவாஜி வழக்கம்போல் இன்று இரவு பஜனைக்கு வருவார். அச்சமயத்தில் நானு வார்த்தைகளைச் சொல்லி அவருடைய மநது மறுபடியும் சம்சாரத்தில் பிரவிர்த்திக்கும்படி செய்கிறேன். ஆனால் நீ மட்டும் இன்று முதல் விட்டல் பக்தியைச் செய்யவேண்டும். அவரும் சுவர்லியை ஒரு நாளும் மறக்கக்கூடாது.

இப் பிரகாரம் சொன்னதைப்பற்றி யோசனைசெய்துகொண்டு ஜீஜாபாயி அம்மாள் இரவில் துகாராமருடையகீர்த்தனைக்குவந்துஉட்கார்ந்தாள். சிவாஜியும் வழக்கம்போல் வந்து உட்கார்ந்தார். இந்த பிரசங்கத்தில் துகாராம் கர்மகாண்டத்தின் பிரயோஜனத்தைச் சொன்னார். ஒவ்வொருவனும் தன் தன் தர்மத்தை அநுசரித்து நடக்கவேண்டியது. இதில் தான் நிஜமான சிரேயஸ் இருக்கிறது. ஹரிபக்தியின் பொருட்டு சம்சாரத்தைவிட்டு காட்டில் போய் உட்காருவதில் யாதொரு பிரயோஜநமுமில்லை. ஜநசமூகத்திலிருந்து கொண்டு தன்சம்சாரத்தை சிரத்தையுடன் நடத்திவந்து ஜநங்களின் சுகத்தை சக்திக்குத் தக்கபடி தேடவேண்டும். இதில் தான் நிஜமான வைராக்கியமிருக்கிறது. தன்னைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஜநங்களுடைய கெட்ட ஸ்திதி பிரதிக்ஷணமும் கண்ணில் பட்டுக் கொண்டிருக்கையில் அதை நிவிர்த்திக்கும் பொருட்டு தன்னால் ஆனமட்டில் பிரயத்நம் செய்யவேண்டும். இப்படி இருக்க இப்படிப்பட்ட ஜநங்களை விட்டுவிட்டு கேவலம் தன் மோக்ஷத்தின் பொருட்டு பருவதத்திலும் குகைகளிலும் போய் உட்காருவதில் சுத்தமாய் புருஷார்த்தமில்லை. மேலும் தன்னுடைய ஜநங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு சம்சாரத்திலிருக்கிறதாயிருந்தால், கிருஹஸ்தாச்ரமத்தைப் போல் வேறு ஆச்ரமம் புருஷனுக்கு ஏற்படவில்லை. ஜகத்தை வெறுத்து, ஸ்திரிபுத்திரர்களை விட்டு உடம்பில் சாம்பல் பூசிக்கொண்டு எவர்கள் விரக்தியை அடைகிறார்களோ அவர்களுடைய இந்திரியங்களெல்லாம் ஒழிவடையாமையால் அவர்கள் மறுபடியும் மறுபடியும் மோஹவசமாகிறார்கள். இப்படிப்பட்டவனை ஒருவனும் மதிக்கமாட்டான். அவனும் நிஜமான மோக்ஷசுகத்தையும் அடைகிறதில்லை. ஆகையால் கிருஹஸ்தாசிரமத்தைத் தியாகம் செய்து, ஸந்நியாஸி வேஷம் தரித்து, அங்குமிங்கும் அலைவதைப் பார்க்கிலும், சம்சாரத்திலிருந்துகொண்டு நல்ல மார்க்கத்தில் நடந்து வருவதும், பரோபகாரம் செய்வதும், ஹரிபக்தியில் ஆயுளைப் போக்குவதும், விசேஷமாயிருக்கும்.

(இன்னும் வரும்.)

A. சிவராவ்.

# மநம்

(260-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது சிற்றின்பத்துக்குரிய கருவி கரணங்களெல்லாம் ஆதாரமின்றிக் கெட்டொழியுமாகலின் மநமென்ப தொன்றில்லையாயிறந்து விடுமென்பதும் தானே யமையும். இதனை இவ்வுண்மையுணர்ந்த தாயுமான ஸ்வாமிகள் "சினமிறக்கக்கற்றாலுஞ் சித்தியெல்லாம் பெற்றாலும்—மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே" என்று கூறியவாற்றானறிக. "உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்—வரனென்னும் வைப்புக்கோர் வித்து" என்று தெய்வப்புலவரும், "அஞ்சி னுகிரு மெயிறு மறுத்திட்டால்—எஞ்சா திறைவனை யெய்தலு மாமே" என்று திருமூல யோகிகளும் இக்கருத்தையே வற்புறுத்தியுள்ளார்கள்.

இவ்வாறாய மநவடக்கத்திற்கு மநம் அழுக்காறு முதலிய குற்றங்களினீங்கித் தூய்மையுற்றிருத்தல் வேண்டும். "அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்றார் தெய்வப்புலவர். இது மற்றவைகளுக்கும் உபலக்ஷணம். சரீரசுத்தி, நாடிசுத்தி முதலியன செய்து கொள்ளுதலும், பழிபாவங்களி னீங்கிவந்த சத்துவாம்சமான உணவுகளை விதித்தவள வுண்ணுதலும், தூய்மையான இடத்தில் வசித்தலும், ஞானசாஸ்திரங்களை யாராய்தலும், தெய்வீகமுள்ள நம் பெரியோர்கள் பாடிய தோத்திரப்பாடல்களால் இறைவனைத் துதித்தலும், பஞ்சாக்ஷர முதலிய மந்திரங்களை ஜபித்தலும், அறிவொழுக்கமுள்ள பெரியோர்களை யடுத்து அவர்கட்குத் தொண்டு புரிதலும், மனத்தூய்மையை யுண்டுபண்ணுவனவாம். சூக்ஷ்ம சரீரத்தின் காரியமே ஸ்தூலசரீரமாகலின் மனதுக்கும் உடம்புக்கும் மிக்க சம்பந்த முண்டு. உதாரணமாக உடம்பு பசி நோய் முதலியவற்றால் வருந்தும்பொழுது மனதில் கோபம், வெறுப்பு முதலிய துர்க்குணங்கள் அதிகரித்தலும், மனதில் கோபம், சோகம் முதலியவை உண்டாயபோழ்து உடம்பு பலவிதமாக வேறுபடுதலும், பிணிவாய்ப்படுதலும் யாவர்க்கும் அநுபவங்களாகும்;

ஆகவின் உடம்பைத் தூய்மைபெற வைத்துக்கொள்ளுதல் மனத் தூய்மைக்குச் சிறந்த சாதனமாகும். அன்றியும் ஜன்மாந்தரங்களிற் பயன் குறியாது செய்த புண்ணிய விசேஷத்தால் ஒருவன் இயல்பாகவே எவ்வளவு மனத்தூய்மையைப் பெற்றிருந்தாலும் "சான்றோரினத்திரு" என்ற முதுமொழிக்கிணங்க ஆன்றோர் கூட்டத்தைச் சேராது தீயவரைச் சேர்ந்தொழுகுவானாயின் ஆகாயத்தில் நிர்மலமாயிருந்த ஜலம் உவர் நிலத்தில் விழுந்து கெடுதல் போலக் கெட்டு விடுவான். சாதுக்களைச் சேர்வானாயின் பின்னும் அதிகமான தூய்மையைப்பெறுவான்; அதனால் மனதையடக்கி உண்மையுணர்ந் தின்புறுவான். அதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் "மனநல நன்குடையராயினுஞ் சான்றோர்க்—கின நல மேமாப்புடைத்து" என அருளிச் செய்வாராயினர்.

சுபம்!

மு. வேங்கிடசாமி நாட்டார்.

## நன்மொழி.

என்றும் சந்தோஷமாய் இருமின், வியசனத்தைத் தவிர்மின், வியசனத்தைப் பாராட்டுபவன் சுயநலம் விரும்புகிறவனாவான். ஒருவன் சந்தோஷமும் வியசனமும் பிறரைத் தாக்குமியல்பின. தன் வியசனத்தால் பிறருக்கு வியசனத்தை மூட்டுகிறவன் பாவம் செய்பவனாவன். அதனால் சந்தோஷமாயிருத்தல் ஒவ்வொருவனுடைய தர்மமாம். அப்படி ஒழுகுவோமானால் நாம் அறியாமலே பிறருக்கும் உலகத்திற்கும் பலவாறாக நன்மைகளை விளைவிப்போம். பிறருக்குச் சுகிர்தம் (சந்தோஷம்) பயக்கும் வாழ்வே வாழ்வு. சந்தோஷமுள்ளவன் ஒருவன் ஒரு சபையில் புகுதல்,இருட்டறையில் விளக்குவைத்தல்போன்றதாம், விளக்கின் ரஸ்மி எப்படி நாலுபுறமும் பரவுமோ, அவ்விதமே சந்தோஷமுள்ளவனின் சந்தோஷகரமான மனோபாவம் பரவும். பிறர்மனங்களைத் தாக்கும். சோர்ந்து நொய்மையானவைகளை உத்ஸாகப்படுத்தும். சந்தோஷமுள்ளவன் தனக்குத் தெரியாமலே பிறரை ஆசீர்வதிப்பான். பிறருக்கு அனுக்ரகம் செய்வான். ஆசையைக் குறைக்கிறவனே சந்தோஷத்தை விர்த்திபண்ணுவான். ஆசை அதிகப்பட அதிகப்பட துன்பம் அதிகப்படும். ஆசை விட விட ஆநந்தம் விர்த்தியாகும். செல்வம் என்பது சிந்தையின் நிறைவே. நல்குரவென்பது அவாவின் பெருக்கே.

317

# மதுரை வித்யா தர்ம பரிபாலன சபை.

இதன் 3-வது வருஷோத்ஸவமானது சென்ற நவம்பர்மீ 30உ யன்று மதுரை காலேஜில் விமர்சையாக நடந்தது. அச்சமயம் சென்னையிலிருந்து வந்திருந்த ஹைகோர்ட்டு வக்கீல் எஸ். ஸ்ரீநிவாசையங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்கும்படி Hon. கே. ராமையங்கார் அவர்கள் வேண்டிக்கொண்டார். மகா-ா-ா-ஸ்ரீ P. R. வெங்கடசலு நாயுடுகாரு அதை ஆமோதித்தார். அங்ஙனம் மகா-ா-ா-ஸ்ரீ ஸ்ரீநிவாசையங்காரவர்கள் அக்கிராசனம் அங்கீகரித்தார். பிறகு சபையின் கௌரவ காரியதரிசியான வக்கீல் ஆர். ரங்கசாமி ஐயர் 3-வது வருஷ அறிக்கைப் பத்திரத்தைப் படித்தார். அதன்பின், மதுரை காலேஜ் பிரின்சிபால் மகா-ா-ா-ஸ்ரீ எ. ராஜாராமையரவர்களும், சேதுபதிஹைஸ்கூல் உதவி உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ கே. சுப்பிரமணிய ஐயர் அவர்களும் சபையானது மதுரையிலிருக்கும் ஏழைப் பையன்களுக்குச் செய்துவரும் சௌக்கியத்தைப்பற்றி சிறப்பாய்ப் பேசினார்கள். பிறகு, ஷேக்ஸ்பியர் நாடகங்களில் ஒன்றாகிய 'நடுவேனிற்கனவு'' என்ற நாடகத்தில் சில பாகத்தை சபையால் உதவி செய்யப்பட்ட மாணாக்கர்களில் சிலர் நிரூபித்தார்கள். அப்பால் மகா-ா-ா-ஸ்ரீ வி. ராமச்சந்திர ஐயரவர்கள் ''ஜனசமூகத்துக்கு நாம் செய்யவேண்டிய கைங்கர்யம்'' என்ற விஷயத்தைப் பற்றி தமிழில் மிக உத்சாகமாய் உபந்யசித்தார்கள். கடைசியில் அக்கிராசனாதிபதியவர்கள் சபையின் வேலையை மிகவும் மெச்சிப் பேசி அது மேன்மேலும் விருத்தியடைந்து இன்னும் அதிகமான மாணாக்கர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்றும், இன்னும் மதுரையிலிருந்து சென்னைபோய்க் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்றும், இன்னும் இங்கிலாந்து, பிரான்சு முதலிய மேனாட்டுப் பிரதேசங்களுக்கு மதுரை ராமனாதபுரம் ஜில்லாக்களிலிருந்து போய்க் கல்விகற்க சபையிலிருந்து உதவி செய்ய வேண்டும் என்றும் மிகவும் உத்சாகத்துடன் பேசினார்கள். தானும் கடைசியாய்ச் சொன்ன காரியங்களுக்குக் கூடிய உதவி செய்யத்தயா

ராயிருப்பதாகவும் வாக்களித்தார்கள். அதன்பிறகு கௌரவகாரிய தரிசி அக்கிராசனுதிபதிக்கு ஹாரம்போட்டு அவர்களுடைய உதார குணத்துக்கும் இளகிய மனதுக்கும் நன்றியறிதலைக் கூறி, அங்கு வந்திருந்த மற்ற கனவான்களுக்கும் நன்றிசெலுத்தினர். பிற்பாடு வந்திருந்த கனவான்களுக்கு புஷ்பங்கள் கொடுக்கப்பட்டன. வருஷோத்ஸவம் இவ்வாறு நிறைவேறியது.

மேற்சொல்லியபடி மகா-ா-ா-ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் வருஷந்தோறும் ரூ 120 இந்த சபைக்கு சந்தா கொடுப்பதாகவும், தவிரவும் சென்னைக்கும், மேனாட்டுக்கும் மாணுக்கர்களனுப்புவதானல் இன்னும் உதவி செய்வதாயும் காரியதரிசிக்கு கடிதம் கொடுத்திருக்கிறார். 6-மாத சந்தாவாக ரூ 60 ம் கொடுத்துதவினர்.

R. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

நீ பிறர்க்குதவி அல்லது பரோபகாரம் புரிதலிலே அவாவுள்ளவனுயிருப்பின், உனக்கு யாதொரு இடையூறு மேற்படா வண்ணம் கவனிக்கவேண்டிய இரகஸியங்கள் மூன்றுள்ளன.

(i) பிறர் நலம் கருதி உழைத்தலே உனக்கு எல்லாவற்றினும் மேலான சந்தோஷமாயிருத்தல் வேண்டுமென்பது ஒன்று.

(ii) இரண்டாவது, நீ உன்னிலும் பெரியார் (மஹான்) ஒருவரின் ஆக்ஞையின் பிரகாரமே, அவருடைய பலத்தின்பேரிலேயே நீ கருவியாகமட்டுமிருந்து பரோபகார கைங்கர்யத்தில் பிரவிர்த்திக்கிறுய் என்பது.

(iii) மூன்றாவது, உன்னிடம் இயங்குகின்ற ஆத்மாவே பிறரிடமும் விளங்குகின்றான் என்ற வுண்மையை அறியவேண்டுமென்பது.

இவ்வுண்மைகள் உன் கைங்கர்ய முறையில் இடையூறுகளைத் தடுப்பதோடும், அம்முறையில் உன்னை வழிநடத்தும் இயல்பினவாகும்.

## காலஞ்சென்ற P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள்.

நமது பிரஹ்மஞானசபையின் முக்கிய அபிமானிகளில் ஒருவரும், இம்மதுரைவாசிகளில் பிரதானமானவர்களில்ஒருவரும், இந்துமதம் என்றஸநாதன தர்மத்தில் விசேஷசிரத்தைவைத்து அதின் கொள்கைகளை ஆழ்ந்த பக்தியுடன் தழுவி வந்தவர்களில் ஒருவருமான, மகா-௱-௱-ஸ்ரீ P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் சென்ற நவம்பர்மீ 24௳ மாலை 4½ மணிக்கு தேகவியோகமானார். அவர்கள் காலஞ்சென்றதால் இந்நகரத்திலுள்ளவர்களுக்கு உண்டாயிருக்கும் துக்கத்தோடு நம்முடைய பிரஹ்மஞான சபைக்கும் ஒரு நஷ்டமேயென்று நாம் சொல்லத்தகும்.

P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் இம்மதுரைக்கடுத்து 1மைல் மேற்கேயிருக்கும் பழங்காநத்தம் என்ற கிராமத்தில் மிகச்செல்வாக்கும் பிரதானமுமானகுடும்பத்தில் 1851-ம் வரு ஜுலைமீ 7௳யில் ஜனித்தார். இளமைப் பருவத்திலேயே அவருடைய சங்கீத சாஹித்ய சக்திகள் எல்லோருக்கும் நன்கு விளங்கின. அவர் சில வருஷங்களாக கிராமத்தில் பிராசீன வழிப்பிரகாரம் அத்தியயனம் செய்து அதற்குப் பிறகு இங்கிலீஷ் வித்தை அப்பியசிப்பதற்காக மதுரை ஜில்லா ஸ்கூலில் படித்து வகுப்புகளில் முதன்மை பெற்று பரிசு பெற்றார்.

அக்காலத்தில் கும்பகோணம் இங்கிலீஷ் வித்யாஸ்தலமாக பேர்பெற்றிருந்தபடியால் அவ்வூர்சென்று அங்கே காலேஜில் கல்வி கற்றார். அங்கே மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறி சர்க்கார் வேலையாகதூத்துக்குடி, நாகபட்டணம் முதலியஇவ்வூர்களில்நியாயஸ்தலங்களில் சில வேலைகளில் அமர்ந்து, பிறகு 1875-ம் வருஷத்தில் நாகபட்டணத்தில் வக்கீல் தொழிலை அப்பியசித்தார். அவர்

அங்கிருந்தபோது நமதுபிரஹ்மக்ஞானசபையின் பிரதம அக்கிராசனம் வகித்த Col. ஆல்காட் அவர்கள் நாகபட்டணத்திற்கு 1883-ம் ஹு த்தில் விஜயமாகி பிரசங்கம்செய்து அங்கு ஒரு கிளைச்சங்கத்தை ஸ்தாபித்தனர். P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் Col. ஆல்காட் அவர்களை அக்காலத்தில் உபசரித்தவர்களில் ஒருவர்.

நாகபட்டணம் அவருடைய தேகசௌக்கியத்திற்கு ஒத்துவராதபடியால் இந்நகருக்கு 1887-ம் ஹு த்தில் வந்து சேர்ந்து அதே தொழிலை வகித்தனர். இவ்வூரில் அவர் எல்லோருக்கும் அபிமானமுள்ள நண்பராய் இங்கே பொது நன்மையாயுள்ள பிரவிர்த்திகள் எல்லாவற்றிற்கும் ஆதரவையும் அதி சூக்ஷ்ம புத்தியின் உதவியையும் புரிந்து வந்தனர். நம்முடைய பிரஹ்மக் ஞான சபையில் அநேகந் தடவை இந்துசாஸ்திர ஆராய்ச்சி சம்பந்தமாய் பல அற்புதமான பிரசங்கங்களை நடத்தியிருக்கின்றனர்.

இங்கிலீஷ், ஸம்ஸ்கிருதம், தமிழ் இப்பாஷைகளில் விசேஷ தேர்ச்சி யடைந்து சில கிரந்தங்களையுமியற்றி யிருக்கின்றனர். சங்கீத சாஹித்யங்களிலும் ஜ்யோதிஷத்திலும் பிரசித்திபெற்ற நிபுணர். எல்லா வித்வான்களையும் ஆதரவு செய்யும் போஷகராய் விளங்கினர். வேதாந்த சாஸ்திரத்தை ஆழ்ந்து கற்றவர். பலவிஷயங்களில் இவரைப்போல தேர்ச்சியடைந்தவர்களை பார்த்தலரிது. மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும் மதுரை தர்ம சாஸ்திர சபைக்கும் அக்கிராசனாதிபதியாக விளங்கினர்.

இவருடைய ஜீவனானது சாந்தியையும் சிரேயஸ்ஸையும் அடைய நாம் ஈசுவரனைப் பிரார்த்திக்கின்றோம்.

வி. இராமசந்திர ஐயர்.

## புத்தகவரவு.

**சூதவனேசுரர்பதிகம், சௌந்தரநாயகி பஞ்சரத்நம்:**—இவ்விரண்டு பிரபந்தங்களும் கொத்தமங்கலம் என்னும் க்ஷேத்திரவாசியாகிய சிவபெருமானையும் தேவியாகிய சௌந்தரநாயகியம்மையையுங் குறித்து முறையே பதிகமாகவும் சந்தப்பாவாகவும் பாடப்பெற்றவை. சொன்னயம் பொருணயம் வாய்க்தனவாய் அமைந்துள்ளன. திருநய நகரவாசியான அ. நரசிம்ம பாரதியவர்களால் இயற்றப்பெற்றவை. விலை அணா 2.

## பத்திரிகை வரவு.

**இந்தியன் அட்வேர்ஸடைஸர்("The Indian Advertiser"):**—இத்தகைய நாமதேயம்பூண்ட பிரெஞ்சு, இங்கிலீஷ், தமிழ் மூன்று பாஷைகளுங் கலந்த பத்திரிகை யொன்று பிரெஞ்சு, இலாகாவாகிய புதுச்சேரியில் பிரசுரமாகி வெளிவந்திருக்கிறது. இதில் நூதன புஸ்தகம், பத்திரிகைகள், மருந்துகள் முதலிய சகலவித சாமான்களும் இன்னரால் ஏற்படுத்தப்பட்டு இன்ன விலையுடன் இன்ன இடத்தில் கிடைக்குமென்ற வேண்டிய விவரங்களுடன் விளம்பரம் செய்யப்படுகின்றன. இவ்விதமான மாதாந்தப் பத்திரிகை நம் தமிழ் தேசந்நிற்கு அவசியந்தான்.

**விசுவ கர்மன்:**—இப்பெயரிய பத்திரிகை யொன்று நம் ராஜதானி கம்மாள ஜாதியார் தம் சீர்திருத்தத்துக்கென ஏற்படுத்திக்கொண்டிருக்கும் பொதுச்சபை யொன்றின் அங்கமாய் சென்னையில் பிரசுரம் செய்யப்பட்டு அதிலொரு சஞ்சிகை நமது பார்வைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இம்மாதிரி நம் நாட்டிலுள்ள ஜாதியார்களொவ்வொருவரும் தத்தம் மேன்மையைக் கருதி முன் வருவதற்குப் பெருமுயற்சி செய்தல் அவசியமே. ஆதலின் இப்பத்திரிகையைக் கண்டபொழுதும் எமக்குச் சந்தோஷமே உண்டாகின்றது. ஆயினும் இவ்வகையினர் தாம் மேன்மை பெறுவதற்குச் செய்யும் முயற்சியின் வழிகள் மாத்திரம் எமக்கு யுக்தமாகத் தோன்றவில்லை. பூர்வகாலத்தில் இவர்கள் விசேஷமாய் உலகத்தை க்ஷேமப்படுத்துவதற்காக எழுந்த பரம ஆசார்ய புருஷர்களின் வம்சஸ்தரென்றும், இவரது பதவியையும், ஆசார்யர்களென்ற நாமதேயத்தையும் பிராஹ்மணர்கள் முதலானோர் பொறாமை கொண்டு, அநியாயமாய் முற்காலத் தரசர்களின்வலிமையால் பிடுங்கிக்கொண்டு இவர்களை அநாதையாய் விட்டுவிட்டார்களென்றும், இன்னும் அவ்விதமே இவர்களைக் கெடுக்க முயலுகின்றார்களென்றும், இக்கலிகாலத்தவரின் துர்ப்புத்திகொண்டு இப்பத்திரிகாதிபர் பிதற்றியிருப்பது நமக்கு மிகவும் வியப்பைத் தருகின்றது. இவர்க்கு இத்தேசத்தின் சரித்திரங்களில் மேல்ஜாதியார் இவர்களைக் கொடுமைபண்ணினதற்கு எவ்வகைப் பிரமாணங்கள் கிடைத்திருக்கின்றனவோ அறியேம்.

ஓர் ஜாதியார் மேன்மையடைதற்கு இது வழியென எமக்குப் புலப்பட வில்லை. பிறஜாதியார் மாட்டு துவேஷத்தை காட்டிச்செய்யும் முயற்சியும் முடிவில் தீங்கையே விளைவிக்குமன்றி, எங்ஙனம் நற்பலனைத்தரும்? இவ் விதமாய் அர்வியவகாரங்களைவிட்டு, எச்சாதியாருக்கும் எம்மதத்தினர்க்கும் பொதுவாயும் யாவராலும் மதிக்கற்பாலனவாயுமுள்ள நற்குணங்களையும் நற்கல் வியையும் அடைய யத்தனம் செய்தால் எவ்வகைப் பெருமையும் கடவுள் அளிப்பரென்பதில்தடையேது? சாதியையும், சடங்குகளையும் பற்றிய சண்டை களாலும், துவேஷம் நிறைந்த மொழிகளாலும் முயற்சிப்பதில் யாது பயன்? சமயச்சச்சரவுகளை எவரும் விட்டொழித்து 'சமரசசன்மார்க்கமன்னிலை' பற்றி ஒழு குதற்கு ஆசைப்படு மிந்நாட்களில், இப்பத்திராதிபரும் இவரது இனத்தவரும் அவ்விதமே வாய்மை, பொறுமை முதலிய பெறுதற்கரிய நற்குணங்களை சிறு வர்முதல் யாவரு மடையும் வண்ணம் போதித்தும், எவரும் கல்வியை மிகக் கற்று பரோபகாரத்தைக் கருதி தன்னைமறந்துழைத்தால் தம் ஜாதி முழுமை யும் உயர்வடையும் என்று வற்புறுத்தியும் வருவாராக.

## சமாசாரம்.

---

நம் தேசத்து உயர்ந்த கவிரத்னமாகிய ஸ்ரீமான் ரபீந்திரநாத் டாகூர் (Rabindranath Tagore) அவர்கள் நோபல் வெகுமதியை (Nobel Prize) அடைந்ததைப்பற்றி மிகவும் ஸந்தோஷிக்கின்றோம். இவ் வெகுமதி சாமா ன்ய வெகுமதியல்ல. ஸ்வீடன் தேசத்தில் நோபல் என்னும் ஒரு ரஸாயன சாஸ்திரி, தன்னால் நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெடிமருந்துகளின் வியாபாரத்தால் கிடைத்த அபரிமிதமான திரவியத்தை, தான் விவாஹமின்றி யே வாழ் நாளைக்கடத்தி வந்தமையால், தன் அந்திய காலத்தில் ஒரு ஸர்வகலா சாலைக்கு எழுதிவைத்தார். ஸர்வதேசங்களிலும் ஒவ்வொரு வருஷமும் ஒவ் வொரு சாஸ்திரத்திலும் ஒவ்வொரு வித்தையிலும் உள்ள அதி நிபுணர்களை ஒரு கமிட்டியார் தேர்ந்தெடுத்து இத் திரவியத்திலிருந்து வரும் வட்டிப் பணத்தை வெகுமதியாகக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு வெகுமதியும் 8000 பவுன் ஆகும். இப்படி ஐந்து வெகுமதிகள் பிரதி வருஷமும் கொடுக்கப்படுகின் றன. வட்டிப்பணமே இவ்வளவு என்றால் முதல் எவ்வளவுதான் என்று சொல்லாமல் விளங்கும். இவ்வெகுமதி கிடைப்பதினால் பணப் பிரயோ ஜனமும் ஏராளம். இதினால் வரும் கௌரவமும் அதிகம். நம்மிந்தியர் களுக்குள் முதல் முதல் இவ்வெகுமதியை யடைந்தவர் ரபீந்திர நாத் டாகூரே. இவர் மிகவும் பேர்போன பெரிய குடும்பமாகிய டாகூர் வம்சத் தவர். இவ்வம்சத்திலிருந்துதான் வங்காளிகளுக்குள் ஒருவர் முதல் முதல் சீர்மைக்குச் சென்று I. C. S. பரீக்ஷை தேர்ந்தார். ரபீந்திரநாத் டாகூரின் வங்காளபாஷையிலிருக்கும் கவிகளின் இங்கிலீஷ் மொழிபெயர்ப்பே எல்லா

தேசத்தாராலும் நன்கு கொண்டாடப் படுவதனால் இவர் கவிசாதுர்யத்தைச் சொல்லவும் வேண்டுமோ! இவருக்கு நீண்ட ஆயுளை பகவான் கொடுப்பாராக.

---

மாதுஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் Mr. G. நாராயணையா கேஸ் விஷயம் பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்ய அநுமதி கொடுக்கும்படிக்கு சென்னை ஹைகோர்ட்டில் மனுப்போட்டிருந்ததற்கு, அவ்வாறு அப்பீல் செய்ய அநுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

மதுரை பிரஹ்மக்ஞானசபையார் தாம் சொந்தமாய் நடத்திவருகின்ற ஸ்ரீமீனாக்ஷி வித்யாசாலை என்னும் பெண்பாடசாலையை "Theosophical Educational Trust" என்ற வித்யாபிவிருத்தி ஸங்கத்திற்கு ஒப்புவித்துவிட்டார்கள். இவ்வித்யாசாலை மேற்கூறிய வித்யாபிவிருத்தி ஸங்கத்தின் மேற்பார்வைக்குள்ளிருந்து, ஸங்கத்தின் கருத்துக்களான உயர் லக்ஷ்யங்களை யநுஸரிப்பதால் முன்னினும் பன்மடங்கு மேன்மைபெறுமென்பதற் கையமில்லை.

---

நாளிது டிஸம்பர்மீ 26உ காசியில் பிரஹ்மக்ஞான ஸபையின் வருஷாந்தரக் கூட்டம் கூடும். அதே தேதியில் கள்ளிக்கோட்டையில் பிரஹ்மக்ஞானக் கிளைச்சங்கங்களின் மஹாஸபை யொன்று கூடும். ஸ்ரீமான் லெட்பீடரவர்கள் அச்சமயம் அக்கிராசநம் வகிப்பார்.

---

நாளிதுமீ 4உ மதுரை பிரஹ்மக்ஞான ஸபையார், தாம் கூடிய மீட்டிங்கில், மாதுஸ்ரீ அன்னிபெஸண்ட் அம்மையாரவர்கள் ஊக்கமாயும், விடாமுயற்சியுடனும் நமக்காக உழைத்துவந்திருக்கிறதற்கும், ஸபையின் க்ஷேமத்திற்கும், ஸத்யமும் மேன்மையுமான கைங்கர்யங்களுக்கே தன்னைத்தியாகம் செய்துவந்திருக்கிறதற்கும் நன்றிபாராட்டி அம்மையாரவர்களிடம் பூர்ண விசுவாசத்துடன் அவர்கள் உபதேசித்திருக்கும் நல்வழிகளில் தீவ்ரமாய்ப்பிரவிர்த்திப்போமென்றும், தியாகதர்மத்தையேமேலாகக்கொண்டவரும், சுத்த சரியையுள்ளவரும், குழந்தைக் கொப்பான சாந்தமுள்ளவரும் நம் போலியருக்கு அகோசரமான லோகாந்தர விஷயத்தைப் பற்றித் தெள்ளிய ஞானமும் உள்ள ஸ்ரீமான் லெட்பீடரவர்களுக்குத் தம் பூரண விசுவாசத்தைச் செலுத்துகிறோமென்றும் இரண்டு தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**உதயதிசை நக்ஷத்திர சங்கம்:**—இச்சங்கத்தின் 3 வது கூட்டம் மதுரை குட்ஷெட் தெருவிலிருக்கும் ஸ்ரீ மீனாக்ஷி வித்யாசாலையில் நாளிது ௵ டிசம்பர்ீ 7௳ ஞாயிற்றுக்கிழமை மாலை 6½ மணிக்கு நடைபெற்றது. அப்போது பிரஹ்மஸ்ரீ பெரியதளம் R. சுந்தரராஜஐயரவர்கள் ஸ்ரீ நரசிம் மாவதாரத்தின் சில தத்துவங்களைப்பற்றி உபந்யசித்தார்கள். இன்னும் சில நண்பர்கள் அக்காலத்தில் சங்கத்திற்குச் சம்பந்தமான விஷயங்களைப்பற்றி உபந்நியாசம் செய்தார்கள்.

---

**குமாரேசகிருபாசங்கம்:**—இச்சங்கம் மதுரையில் ஸ்ரீ மீனாக்ஷியம்மன் கோவில் தெற்கு ஆடிவீதியில் உள்ளது. **சமரஸவாழ்வு** என்ற ஒரு முக்கிய நோக்கத்தை உயர் லக்ஷியமாகக்கொண்டு இச்சங்கம் நடைபெறுகிறது. இம் மாசத்தில் நடந்த இதன் வருஷோத்ஸவத்தில் சிறந்த வித்வான்களால் பல புதிய விஷயங்களைப்பற்றி தமிழில் பிரஸங்கங்கள் நிகழ்ந்தன. இச்சங்கம் ஞானவெள்ளம் ஓடுதற்கு ஒரு வாய்க்காலாக அமையும் வண்ணம் மஹாத்மாக் கள் அருள்புரிவாராக.

---

**பிரஹ்மஞான சபை அங்கத்தினர்களின் கடமை:**—மதுரை ஹைகோர்ட்டுவக்கீல் பிரஹ்மஸ்ரீ V. ராமசந்திரஐயரவர்களும்,லாட்ஜ்இன்ஸ்பெக்டர் பிரஹ்மஸ்ரீ. R. சுந்தரராஜ ஐயரவர்களும் இவ்வூரிலுள்ள சங்கங்களி லெல்லாம் **ஸமரஸபாவத்தின்** உயர்நலத்தைப்பற்றிப் பிரஸங்கித்து வருகிறார் கள். இவ்வூரிலுள்ள ஸ்ரீசாண்யாபிமத் விஷ்ணுசித்த ராமாநுஜ ஸபையில் பிரஹ்லாத சரித்திரத்தைப்பற்றி அழகாய் பிரஹ்மஸ்ரீ R. சுந்தரராஜ ஐயரவர் கள் உபந்யஸித்தார்கள். இம்மாதிரியே மற்றைப் பிரஹ்மக் ஞானசபை அங் கத்தினருக்கும் தத்தம் சுற்றத்தில் ஸமரஸபாவத்தையே பெரிதும் பரவச் செய் யவேண்டுவது முக்கிய கடமைகளி லொன்றும்.

**பத்திராதிபர்.**

---